திருக்கானப்பேர் என்னும் காளையார் கோவில்



தலவரலாறும் — திருமுறையும்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கானப்பேர்

என்னும்

காளையார்கோயில்

தலவரலாறும் — திருமுறையும்

கும்பகோணம்
நகராட்சி உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்
வித்துவான் சு. சுவர்ண காளீச்சுரன் அவர்களால்
தொகுத்துப் பதிப்பிக்கப் பெற்றது

★

தேவகோட்டை
P. S. S. சோமசுந்தரம் செட்டியாரவர்களால்
வெளியிடப் பெற்றது

நவம்பர் 1959

சிவாலய மான்மியக் கோவை

கானப்பே ரென்னுங் காளையார் கோவிற்
கருதிவாழ் காளை யப்பரே
வானவர் புகழ்வன் றெண்டரை யெதிர்சென்
றழைத்திடும் வள்ளலே, வறுமை
மேனிக ழெனை கடைக்கணித் தருள்வாய்
மிக மகமாயிதன் தலைவா
தேன் வழிந் தொழுகும் தெரியலார் புயத்துச்
செல்வமே கருணைவாரிதியே



திருக்கானப்பேர் — சோமநாதர் கோபுர தரிசனம்

31-1

ஆராய்ச்சி முன்னுரை

சங்க காலம்

காளையார்கோயில் என்பது 1800 ஆண்டுகட்கு முன் கானப்பேர் எனப் பெயர்பெற்ற இடமாகும். இவ்வூரில் ஒரு பெருங்கோட்டை இருந்தது. அக்கோட்டையைச் சுற்றிலும் பெருங்காடு சூழ்ந்திருந்தது. கோட்டையை ஆழ்ந்த அகழி அரவணைத்துக் கிடந்தது. மதிற்சுவர் வானைத் தொடுவதுபோல் மிக்க உயரமாக விளங்கியது. காவற்காட்டில் கதிரவன் வெளிச்சம் உள்நுழைய முடியாத படி மரங்கள் அடர்ந்திருந்தன. கோட்டையைச் சூழச் சிற்றரண்கள் பல இருந்தன. அவை பகைவரால் அணுவ தற்கு அருமையான பாதுகாவல் பெற்று விளங்கின.

இத்தகைய பாதுகாவல் மிகுந்த கானப்பேர், பாண்டிய நாட்டைச் சேர்ந்த கானப்பேர்க்கூற்றத்தைச் சேர்ந்தது. இதனை வேங்கைமார்பன் என்பவன் சங்ககாலத்தில் ஆண்டு வந்தான். அக்காலத்தில் பாண்டிய நாட்டை உக்கிரப் பெருவழுதி என்ற பாண்டிய மன்னன் புரந்து வந்தான். இப்பாண்டியனுக்கும் வேங்கைமார்பனுக்கும், எக்காரணம் கொண்டோ பகைமை முற்றியது. பாண்டியன் மிக்க பாதுகாவலினையுடைய கானப்பேர்மீது படை எடுத் தான். சிற்றரண்களைத் தன் படைவலிமையால் அழித் தான்; பேரரணையும் கைப்பற்றினான்; வேங்கைமார்பனையும் வென்றான்; செயற்கரிய இச்செயலால் உக்கிரப்பெருவழுதி, **கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி** என்று அழைக் கப்பட்டான். இவனது வெற்றியைச் சங்ககாலப் புலவரான ஐயூர் மூலங்கிழார் பின்வருமாறு பாடியுள்ளார்.

புலவரை	யிறந்த	புகழ்சால்	தோன்றல்
நிலவரை	யிறந்த	குண்டுகண்	அகழி
வான்தோய்வு	அன்ன	புரிசை	விசும்பின்
மீன்பூத்து	அன்ன	உருவ	ஞாயில்
கதிர்நுழை (கு)	அல்லா	மரம்பயில்	கடிமிளை
அரும்குறும்பு	உடுத்த	கானப்பேர்	எயில்
கருங்கைக்	கொல்லன்	செந்தீ	மாட்டிய
இரும்புஉண்	நீரினும்	மீட்டற்கு	அரிதென
வேங்கை	மார்பன்	இரங்க	வைகலு
மாடுகொளக்	குழைந்த	தும்பைப்	புலவர்
பாடுதுறை	முற்றிய	கொற்ற	வேந்தே
இகழுநர்	இசையொடு	மாயப்	
புகழொடு	விளங்கிப்	பூக்கநின்	வேலே

— புறநானூறு, செ. 21

இடைக்காலம்

இதுகாறும் கூறப்பெற்ற செய்திகள் கி. பி. 300-க்கு முற்பட்டவை. கி. பி. 7, 8, 9-ஆம் நூற்றுண்டுகளில் வாழ்ந்த சைவ சமய குரவர் காலத்தில் கானப்பேர் என்ற சங்ககாலப் பெயர் திரு என்ற அடைமொழி பெற்றுத் திருக்கானப்பேர் என வழங்கலாயிற்று. இதனைத் தேவாரத்தில் காணலாம். கி. பி. 7-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த, "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்" ஞானசம்பந்தர் இத்தலத்திற்கு வந்து கொல்லிப்பண்ணில் திருப்பதிகம் பாடியுள்ளார். அவர் காலத்திலே வாழ்ந்த உழவாரப் படையாளராகிய திருநாவுக்கரசர் இத்தலத்தைத் தம் பாக்களில் குறிப்பிட்டுள்ளார். கி. பி. 9-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த தம்பிரான்தோழர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இந்தளம், பழம்பஞ்சுரம், புறநீர்மை என்னும் பண்களில் பல பாக்கள் பாடியுள்ளார்.

கல்லாடதேவநாயனர், கபிலதேவநாயனர், பரணதேவ நாயனர், கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும் பற்றப்புலியூர்நம்பி, கி. பி. 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த உமாபதி சிவாசாரியார், கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் முதலியோர் தத்தம் பாக்களில் இத்திருத்தலத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர் என்பது அறிந்து மகிழத்தக்கது. திருஞானசம்பந்தர் பாடிய மூன்றும் திருமுறையிலும், திருநாவுக்கரசர் பாடிய ஆறும் திருமுறையிலும், சுந்தரர் பாடிய ஏழாம் திருமுறையிலும், பதினொராம் திருமுறையில் கல்லாட தேவநாயனர் பாடலிலும், பன்னிரண்டாம் திருமுறையில் சேக்கிழார் பாக்களிலும் இத்திருக்கானப்பேரைப் பற்றிப் பல செய்திகள் காணப்படுகின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்க செய்திகளைக் கீழே காண்க:

திருக்கானப்பேர்த் திருமுறையில் காணும் செய்திகள்.

மூன்றுந் திருமுறை: திருக்கானப்பேர் காடுகளால் சூழப்பட்ட ஊர். அங்கு மலர்ந்து மணம் பரப்பும் பூக்களில் தேன் நிறைந்து நிற்கும். கானப்பேரில் உள்ள பொய்கைகளில் மலர்ந்திருக்கும் நீல மலர்களில் வண்டுகள் பண் பாடும். காடுகளில் திரியும் யானைகளும் இறைவனை வழிபடும் வழக்கமுடையவை. ஆண்யானைகள் விடியலில் குளத்தில் மூழ்கியெழுந்து காட்டு மலர்களைப் பறித்துக் கொண்டு கோயிலுக்குச் சென்று வழிபடும். பெண்யானைகளும் அவற்றின்பின் செல்லும்; வழிபாட்டிற்குரிய இடத்தைத் துதிக்கைகளால் தடவித் தூய்மை செய்து கொடுக்கும். பெண்யானைகளின் துணையோடு களிறுகளின் வழிபாடு விதிமுறைப்படி நடைபெறும்.

கானப்பேர் இறைவனை வழிபடும் அடியார்கள் அவனது கோயிலின் தூவியை நன்னீரால் ஆட்டி மான் மதச் சாந்தும் மலரும் இட்டு வணங்குவர். கானப்பேர் இறைவன் அவ்வூர்க் கோயிலகத்து மட்டுமன்றிப் பண்பு சான்ற மனித மனங்களிலும், குளம், ஆறு, கடல் ஆகிய

வற்றில் நிறைந்து ததும்பும் நீரிலும், மலர்களிலும், முழ வொலியிலும், பாட்டிலும், வழிபாட்டிற்கெனப் படைக்கப் படும் பொருள்களிலும் உறைகின்றான். எல்லாப் பொருள் களிலும் அவற்றின் உயிராக மறைந்து நிற்கும் இறைவன் கானப்பேர்க் கோயிலில் இலிங்கவடிவாய் வெளிப்பட்டு நிற்கின்றான். அவனை அடைந்து தம் குறை தீர்க்குமாறு இரந்து வழிபடுவார்க்கே அவன் அருள்புரிவான். அங்ஙனம் குறையிரந்து வழிபடாதாருடைய குற்றங்களை இறைவன் களையான். மனிதர், தம் குற்றங்களை எல்லாம் இறைவன் முன்னிலையில் வாய்விட்டுச் சொல்லி, அவற்றிற்காக வருந்திக் கண்ணீர் சிந்தி மன்னிப்புக் கேட்க வேண்டும். அவ்வாறு கேட்டால் இறைவன் அருள் எளிதில் கிடைக்கும். மனிதப் பிறப்பை விடுத்து விண்ணுலக வாழ்வினைப் பெற விரும்புகின்றவர்கள் கானப்பேர்க்காளையை வழிபடல் வேண்டும். நோயற்ற வாழ்வு வாழவேண்டும் என விரும்புபவர்கள் கானப்பேர் இறைவனை நாள்தோறும் மலர்களால் அருச்சித்து வரவேண்டும். அவ்வாறு வழிபடுவார் நாளுக்குநாள் உயர்வான நன்மைகளைப் பெற்று வாழ்வர். கானப்பேர்க் கோயிலில் வழிபாடு செய்தலே சிறந்த தவம். முன்னைப் பிறப்பில் தவம் செய்தவரே இத்தவத்தை எளிதில் பெறுவர். "தவமும் தவமுடையார்க்காகும்" என்பது பண்டையோர் கொண்ட கொள்கை.

ஆறாந்திருமுறை: சிவபெருமான் கானப்பேரில் மிக விருப்புடன் எழுந்தருளியிருக்கின்றான். தேவர்களும் திருமாலும் நான்முகனும் மலரால் அருச்சித்து மறையோதி நடனமாடி வழிபட்டும் இறைவன் அவர்களுக்கு அருள் புரியாமல், மனிதர்க்கு அருள்புரிவான்வேண்டிக் கானப் பேர்க்கோயிலில் எழுந்தருளியிருக்கின்றான்.

ஏழாந்திருமுறை: அடியார்கள் கானப்பேர்க்கோயிலில் கூடி நின்று உருக்கத்தோடு பாடல்கள் பாடி இறைவனை வழிபடுவர். நம்மிடத்துள்ள செல்வம் நமக்கு வேண்டிய பொழுதெல்லாம் பயன்பட்டு நன்மையளிப்பது போல இறைவனும் நல்லடியார்க்கு என்றும் எப்பொழுதும் துணை நின்று நன்மை செய்வான். வானிடை மதியாகவும், பருதி

யாகவும், காற்றாகவும், தீயாகவும் நிற்பவன் இறைவனே. இவ்வுலகமே அவனது உருவம். அவன் தன் அடியவர்க்குத் தொண்டு பூண்டு துணை நிற்கவும் முன்னிற்கின்றான்.

பதினோராந்திருமுறை: கண்ணப்பநாயனாரது வரலாறு இப்பாடலுள் கூறப்படுகிறது. பெரியபுராணத்துட் காணும் இவரது வரலாற்றிற்கும் இதற்கும் ஒரு சிறிய வேறுபாடு உள்ளது. கண்ணப்பர் காளத்தி மலையின்மீது எழுந்தருளியிருக்கும் குடுமித்தேவரை வழிபட்டு உய்வதாகப் பெரிய புராணம் கூற, இவ்வரலாறு அவர் கானப்பேர் இறைவனை வழிபட்டதாகக் கூறுகின்றது.

பன்னிரண்டாந்திருமுறை: 1. திருஞானசம்பந்தர் பாண்டி நாட்டுத் தலங்களாகிய திருப்புத்தூர், திருப்பூவணம் ஆகியவற்றை வணங்கிக் கற்றவர்கள் தொழுது ஏத்தும் கானப்பேரையும் வணங்கினார்; ஆங்குறையும் இறைவன் மீது பதிகம் பாடினார். 2. சுந்தரமூர்த்திநாயனார் சேரமான் பெருமாள் நாயனாரோடு குற்றாலம், நெல்வேலி, இராமேச்சுரம் ஆகிய பாண்டி நாட்டுப் பதிகளை வணங்கித் திருச்சுழியலை அடைந்து ஆங்குறையும் இறைவனை வணங்கிச் சிலநாள் அவ்வூரில் தங்கினார். ஒருநாள் இரவில் கானப்பேர் இறைவன் அவரது கனவில் தோன்றி "யாம் இருப்பது கானப்பேர்" எனச் சொல்லி மறைந்தார். இறைவனின் அருளை உணர்ந்த சுந்தரர் சேரருடன் கானப்பேரை அடைந்து பதிகம் பாடினார்; சிலநாள் அப்பதியில் தங்கினார்.

கானப்பேரில் உறையும் முருகன்மீது அருணகிரியார் திருப்புகழ் பாடியுள்ளார்.

பிற்கால வரலாறு

சங்ககால முதல் கானப்பேர் சிறப்புற்றிருந்ததாயினும் சம்பந்தர் காலம் முதலே அது சமயச் சிறப்புப் பெற்றது என்பது திருமுறைகளால் தெரிகின்றது. பாண்டிய

மன்னர்கள் இங்குள்ள சிவன் கோயிலைச் சிறப்பாகப் போற்றிப் பாதுகாத்து வந்தனர். அதனுல் இத்தலம், பாண்டிய நாட்டுச் சைவத் தலங்கள் பதினுன்கனுள் ஒன்றெனப் பெயர் பெற்றது. பாண்டியர்க்குப் பின்வந்த நாயக்கர் காலத்திலும் இத்தலம் சிறப்புற்றிருந்தது. எந்நாட்டுக்கும் அடிமையாகாத தென்னுட்டு மண்ணில் வரிகொடா இயக்கம் தொடங்கி இந்திய நாட்டின் உரிமைக்கு முதன் முதல் வித்தூன்றிய விடுதலை வீரன் வீரபாண்டியக் கட்டபொம்மன் வாழ்ந்த காலத்தில் இருந்த மருதுபாண்டியர் இத்தலத்தைச் சிறப்பாகக் கவனித்து வந்தனர். சின்னமருது, பெரியமருது என்னும் அந்த உடன்பிறப்பாளர்கள் இத்தலத்திற் செய்த திருப்பணிகளையும் இத்தலத்திற்கும் அவர்கட்கும் உள்ள தொடர்பையும் காளையார்கோயில் குருக்கள் முதலியோர் இன்னும் கூறி வருகின்றனர்.

இன்றைய நிலை

காளையார்கோயில் என்னும் ஊர் சிறியது. அவ்வூரின் வழியே தொண்டிக்குச் செல்லும் நெய்யாவி வண்டிப் பாதையில் (பஸ் வழி) இடப்புறம் அடர்ந்தகாடு போன்ற தோட்டம் ஒன்று இருக்கின்றது. அவ்வகன்ற பகுதியிற்றுன் பண்டைக்காலக் கோட்டை இருந்தது என்று ஊரார் உரைக்கின்றனர். கோயிலில் மருதுபாண்டியர் கட்டிய கோபுரம் வானளாவி நிற்கின்றது. உள்ளே தூண்களில் உள்ள உருவச் சிற்பங்கள் சின்ன மருது, பெரிய மருது என்பவரையும் அண்மையில் கோயிலைப் பழுதுபார்த்த நகரத்தாரையும் குறிக்கின்றன.

இத்தலத்தைப் பற்றிச் செவிவழிச் செய்தியாகவும் வடமொழிநூல் வாயிலாகவும் கூறப்படுகின்ற செய்திகள் கீழ்வருவன.

தலவரலாற்றுச் சுருக்கம்

மங்கலப் பாண்டி வளநாட்டில், பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யத் திருக்

கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலங்கள் பலவற்றுள் சைவ சமய குரவர்களாகிய சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய பெருமக்களின் திருப்பதிகங்களாற் பெருமை பெற்று விளங்குவன பதினன்கு திருத்தலங்களாகும். அவை திருவாலவாய், திருப்புனவாயில், திருக்குற்றாலம், திருவாப்பனூர், திருவேடகம், திருநெல்வேலி. திருவிராமேச்சுரம், திருவாடானை, திருப்பரங்குன்றம், திருச்சுழியல், திருப்புத்தூர், திருக்கானப்பேர், திருக்கொடுங்குன்றம், திருப்பூவணம் என்பனவாம்.

இவற்றுள் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் சிறப்புற்று விளங்குவது திருக்கானப்பேர். இத்தலம் தெட்சிண காளிபுரம், சோதிவனம், மந்தாரவனம், மோட்சப்பிரதம், சைவ க்ஷேத்திரம், காந்தாரம், தவசித்திகரம், தேவதாரு வனம், பூலோக கைலாசம், அகத்திய க்ஷேத்திரம், மகா காளிபுரம் என்பன முதலாகப் பல திருப்பெயர்களைக் கொண்டது; காளையார்கோயில் என வழங்கப்பெறுவது. இங்குள்ள தீர்த்தங்கள் சிவகங்கை, காளி தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், சரசுவதி தீர்த்தம், கௌரி தீர்த்தம், இலக்குமி தீர்த்தம், திக்குப் பாலகர் தீர்த்தங்கள், சுதரிசன தீர்த்தம், உருத்திர தீர்த்தம், சந்திர புட்கரணி முதலியனவாம்.

இத்தலத்தின் பெருமை சிவபெருமானல் உமாதேவியாருக்குத் திருவாய்மலர்ந்தருளப் பெற்றபொழுது கேட்டுக்கொண்டிருந்த முருகப் பெருமான் அகத்திய முனிவருக்குக் கூற, அவர் உதங்க முனிவருக்கு உரைக்க, அவர் சதாநீக மகாராஜனுக்குச் சொல்லியதாக வியாச முனிவர் பதினெண் புராணங்களுள் சூரிய புராணமாகிய பிரமகைவர்த்தத்திற் கூறுகின்றார்.

அகத்திய முனிவர், இத்தலத்தை யடைந்து சிவகங்கையில் மூழ்கி ஆண்டவனது உண்மை உருவத்தை உணர்ந்தார்.

சிவபெருமானுடைய திருக்கண்களை விளையாட்டாகத் தன் கைகளாற் பொத்திய குற்றத்திற்காகச் சாபம் பெற்ற

உமாதேவி, பூவுலகத்திற் காளியுருவத்தோடு வாழ்ந்து வருங் காலத்தில், பெருவரத்தை ஆண்டவனிடம் பெற்ற சண்டாசுரனின் தீச்செயல்களால் வருந்திய திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் ஆண்டவன் கட்டளைப்படி அம்மையிடம் வேண்ட சண்டாசுரனோடு போர்செய்து அவனைக் கொன்று அம்மை வெற்றிபெற்றாள்.

சண்டாசுரவதம் வேண்டித் தேவர்கள் தேவியைக் கண்ட இடமே "கண்டதேவி" என்றும், அவள் தங்கியிருக்கத் தேவர்கள் நிருமித்த கோட்டையே "தேவி கோட்டை" அல்லது "தேவகோட்டை" யென்றும் அவ்வம்மையே "கோட்டையம்மன்" அல்லது "பத்திர காளி" என்றும், அம்மை சண்டாசுரனை வெற்றி கொண்ட இடமே "வெற்றியூர்" என்றும் சண்டாசுரனுடைய தேர்க் கொடி முறிந்த இடமே "கொடிக்குளம்" என்றும், அவனுடைய அம்புகள் வீழ்ந்த இடமே "மாளக்கண்டான்" என்றும், வெற்றி கண்ட தேவர்கள் பூ மழை பொழிந்த இடமே "பூங்குடி" என்றும் தற்காலத்தில் வழங்கப்பெறுகின்றன என்று பெரியோர் கூறுவர்.

சண்டாசுர வதத்தின் பின்னர், காளி சோதிவனத்தையடைந்து, காளீசரைப் பூசித்துக் கரிய உருவம் நீங்கப் பெற்றுச் சுவர்ணவல்லியாகித் தூலலிங்கமாகிய சோமேசரை வழிபட்டுக் கலந்து சௌந்தரநாயகியைத் தொழுது, காளீசரை மணந்து, கருணைக் கடலாக விற்றிருக்கின்றான். சோதிவனத்திற்கு வந்து சிவகங்கையில் மூழ்கித் திருவருள் பெருத் தேவர்களே இல்லை என்று உரைப்பர்.

கங்கைநீர் கொண்டு காளீசரை ஆட்டக் கருதிய தேவ தாசப் பாண்டியனுக்குச் சிவகங்கைத் தீர்த்தத்தின் பெருமையைக் காளீசர் கூறி அந்நீராடுதலையே விரும்பினர் என்பர்.

வாலகில்லியரென்னும் தபோதனர்களின் சாபத்தால், மானிடவுருப் பெற்ற திருமகள், இத்தலத்தை யடைந்து வழிபட்டு முன்னை நிலையை அடைந்தாள். திருமாலின்

சக்கரமாகிய சுதரிசனம், ஒருகாலத்துப் பகைமேற்சென்று மழுங்கி, இத்தலத்தை வழிபட்டு ஒளிபெற்றது. எட்டுத் திக்குப் பாலகர்களும், இத்தலத்தை வழிபட்டுப் பேறு பெற்றூர்கள்.

ஆயிரங்கோடி உருத்திரர்களும் கொண்ட அகந்தையால் அம்மையார் அவர்களை அயிரை மீன்களாகும்படி சபிக்க, அவர்கள் கானப்பேரை அடைந்து சாபம் நீங்கப் பெற்றூர்கள் என்று கதை கூறும்.

வீரசேன பாண்டியனின் பிள்ளையில்லாக்குறை இத் தலத்திற்கு வந்து வழிபட்டதும் நீங்கிற்று. வரகுண பாண்டியனுக்குச் சோழமன்னன் கொடுத்த சுகந்தகேசி என்னும் மங்கையைக் காளீசருக்கு அவர் தர, பெருமான் அவளைப் பெற்றுத் தமது இலிங்க உருவத்திற் கலந்து கொண்டனர். இத்தகைய வரலாறு ஒன்று திருவிடைமருதூரிலும் நிகழ்ந்ததாகச் சைவ நூல்கள் கூறுகின்றன.

விக்கிரம சோழன் காளீசரை வணங்கிப் புத்திரப் பேறடைந்து "தாளவனம்" என்னும் நாட்டரசன்கோட்டையில், கண்ணுடையநாயகி ஆலயத்தின் தென்பகுதியில் தன்பெயரால் ஒரு இலிங்கம் நிறுவிப் பூசித்துப் பேறு பெற்றூன்.

குருபத்தினியைப் புணர்ந்த குற்றவாளியாகிய புட்கரன் என்னும் அந்தணனது பாவம், இத்தலத்தை வழிபட நீங்கிற்று. விந்திய மலையை யடுத்த வனத்தில் திரிந்துகொண்டிருந்த ஐந்து பேய்கள், கௌதமர் சொற்படி கானப்பேரை யடைந்து வழிபட்டு நற்கதி பெற்றன.

இத்தலத்திலுள்ள உருத்திர தீர்த்தத்தில் மார்கழி மாதப் பூரணையில், கங்கை முதலிய புண்ணிய நதிகள் வந்து மூழ்கித் தங்கள் பாவங்களைப் போக்கிக் கொள்ளுகின்றன. இத்தலத்தில் கௌதம முனிவர் ஞானோபதேசம் பெற்றூர் என்பர்.

நந்தியெம்பெருமானிடம் தருக்குற்ற தேவேந்திரனின்
வெள்ளையானை, காட்டானை யாகும்படி சாபம் பெற்று
இத்தலத்தை யடைந்து தனது கொம்பினாற்றோண்டிய
"ஆனைமடு" என்னும் தீர்த்தத்தில் மூழ்கிச் சோமேசரை
யும் காளீசரையும் வழிபட்டுச் சாபம் நீங்கப் பெற்றது.

கைலையில் தருக்குற்ற தேவேந்திரன் சிவபெருமானாற்
சாபம் பெற்று, இத்தலத்தை யடைந்து சோமேசருக்கும்
காளீசருக்கும் பற்பல திருப்பணிகள், திருவிழாக்கள்
செய்து சாப நீக்கமும், நல்வரங்களும் பெற்றான். ஆண்டு
தோறும் வைகாசி மாதம் பூரணையில் இந்திரன் வழிபாடு
இத்தலத்தில் நடைபெறுகின்றது.

கண்ணுவர் என்னும் அந்தணர் மகன் சுசரிதனுக்கு
ஏற்பட்ட கயரோகம், ஆனைமடுவில் மூழ்கி ஆண்டவனை
வழிபட நீங்கிற்று. தேவசேனனென்னும் அரசன் அறியா
மையால் ஒரு முனிவரைக் கொல்ல, அதனால் அவனைச்
சார்ந்த பிரமஹத்தித் தோடம், இத்தலத்து வழிபாட்டால்
நீங்கியது. காசிப முனிவரால் ஊமையாகும்படி பெற்ற
மகாகாளனின் சாபம் இத்தலத்து நீங்கிற்று.

இன்னும் சந்திரன், தேவராதன் முதலாக இத்
தலத்தை வணங்கி நற்பேறுகள் பெற்றோர் பலர்.

இத்தல வரலாறு கந்தபுராணத்துச் சங்கர சங்கிதை
யில் க்ஷேத்திர காண்டத்திலும் கூறப்பெற்றுள்ளது.

காளையார் கோயில்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

ஒரு ஊரிலே ஒரு பெரியவர். அவருக்கு மூன்று பிள்ளைகள். மூவரும் கட்டிளம் காளைகளாக வளர்கின்றனர். இருபது இருபத்தோரு வயதையும் கடந்து, நல்ல நல்ல மனைவியரையும் பெற்று வாழ்க்கை நடத்துகின்றனர். ஒரே தாய் வயிற்றில் பிறந்தவர்கள்தான் என்றாலும், ஒவ்வொருவரது வாழ்க்கையும் ஒவ்வொரு விதமாக நடக்கிறது. காரணம் மூத்தவர் நல்ல உழைப்பாளி; எப்போது பார்த்தாலும், நிலங்கரைகளைப் பார்ப்பதிலும், வியாபாரத்தைப் பெருக்குவதிலும், பணம் சேர்ப்பதிலுமே கவனம். ஆதலால் குடும்ப வருவாய் பெருகுகின்றது; கவலையற்றிருக்கின்றனர் எல்லோரும். நடு உள்ளவரோ மூத்தவருக்கு ஏறுமாறானவர்; நல்ல செலவாளி. சம்பாதிப்பதற்கோ ஒரு மூத்த சகோதரர் இருக்கிறார், ஆதலால் உடலை வருத்தாமல் உழைப்பே இல்லாமல் பெரியவர் சம்பாதிப்பதை எல்லாம் கூத்திலும், களியிலும், உண்டியிலும் உடையிலுமாகச் சிலவு செய்து வருகிறார். தமையனோ தந்தையோ தட்டிக் கேட்பதில்லை. கேட்கவா வேணும், ஆடம்பர வாழ்க்கையை அலங்காரமாக நடத்த. ஆனால் மூன்றாவது கடைக் குட்டி, மிக்க அமரிக்கை ஆனவர். குடும்ப சம்பாத்தியத்தை விருத்தி செய்ய உதவவில்லை தான் என்றாலும், வீண் விரயம் செய்யவும் அவர் முனைகிறதில்லை. தானுண்டு, தன் வீடு உண்டு என்ற முறையில் நல்ல சுகமான வாழ்விலே திளைத்துக்கொண்டிருக்கிறார். இப்படி ஒரு குடும்பம். ஏன் ஒரு குடும்பம்? நமது அனுபவத்திலே இத்தகைய குடும்பங்கள் எத்தனையையோ நாம் பார்த்திருக்கிறோம். அதனால் இப்படி ஒரு குடும்பம் நடக்கிறது என்றால் அதிசயம் இல்லைதானே.

ஆனால் இதே விதமாக நாம் வணங்கும் கடவுளர் வாழ்விலும் நடைபெறுகிறது; அதுவும் எல்லாம் வல்ல இறைவன் சிவபெருமானது வாழ்க்கையிலேயே நடக்கிறது. ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலையும் நடத்தும் பரம்பொருளாம் சிவனே, இந்தக் குடும்பத்தில் உள்ள சகோதரர்களைப் போல மூன்று நிலையிலும் நின்று நமக்கு அருள் புரிகிறார் என்று அறிகிறபோதுதான் நாம் அதிசயம் அடைகிறோம். சமீபத்தில் ஒரு சிறு ஊருக்குச் சென்றிருந்தேன். அங்குள்ள கோயிலுக்கும் சென்றேன். கோயிலுக்குள் இருந்தது மூன்று கோயில்கள். ஒவ்வொரு கோயிலிலும் ஒவ்வொரு மூர்த்தி, அவரவர் தேவியருடன். "ஒருவனாய் உலகேத்த நின்ற ஒரு உருவே மூவுருவமாகி நிற்கின்றான்" என்று அன்று அப்பர் பாடியது இக்கோயிலில் உள்ள மூர்த்திகளை நினைந்து தானோ என்னவோ? கோயிலில் முதல்வராக இருக்கும் மூர்த்தி காளீசர். அவருக்கு வலப்பாகத்தில் இருப்பவர் சோமேசர். இடப்பக்கத்தில் இருப்பவர் சுந்தரேசர். இந்த மூன்று பேரைப்பற்றியும் ஊரில் உள்ள மக்கள் சொல்கிறார்கள் "காளீசர் தேட, சோமேசர் அழிக்க, சுந்தரேசர் சுகிக்க என்றல்லவா இங்கு ஏற்பட்டுவிட்டது" என்று. இதை இன்னும் விளக்கமாகவே தெரிய, கொஞ்சம் விசாரித்தேன்.

இந்தக் கோயில் சொத்து முழுவதும், ஆம், நாற்பது கிராமங்களில் உள்ள நிலமும் இரண்டு லக்ஷம் பெருமான நகைகள், மஞ்சங்கள் எல்லாம் தேடிச் சேர்த்து வைத்திருப்பவர் காளீசர்தான். நிலங்களின் பட்டா எல்லாம் அவர் பேரிலேதான். சொத்து சுதந்திரம் எல்லாமே அவருக்குத்தான். ஆனால் அவருக்கு என்று பெரிய பிரம்மோத்சவமோ அல்லது மற்றச் சிலவுகளோ அதிகம் கிடையாது. அவருக்கு நடக்கும் உத்சவம் எல்லாம் தைப் பூசத்தில் புஷ்ய ஸ்நானம்தான். ஆனால் சோமேசருக்குத்தான் ஆடம்பரமான உத்சவம், வைகாசி விசாகத்திலே. அந்த பிரம்மோத்சவத்தில்தான் தேரோட்டம், தெப்பம், புஷ்பப் பல்லக்கு எல்லாம், மொத்தச் சிலவு பதினயிரம் வரை ஆகும். ஆடம்பரமான சிலவுகளுக்கு குறைவே இல்லை. இருவரையும் அடுத்து ஒரு சின்னஞ்சிறு கோயிலிலே

குடியேறி இருக்கும் சுந்தரேசரோ மிக்க அமைதியாக வாழ்கிறார். நித்தியப்படியிலும், இவர் தேவை மிகமிகக் குறைவுதான். உத்சவாதிகளிலும் இவர் கலந்து கொள்கிறது இல்லை. தான் மதுரையிலிருந்து புறப்பட்டு நடையாய் நடந்து இங்கு வந்தது எல்லாம் தன் பக்தன் **வீரசேன பாண்டியனுக்கு** அருள் புரியத்தானே, என்பதை அவர் மறந்து விடவில்லை. ஆதலால் கொஞ்சம் அடக்க ஒடுக்கமாகவே இருக்கிறார், இந்தச் சுந்தரேசர் இங்கு. ஆம். அங்கயற்கண்ணியாம் அருமை மனைவியையும், அவர் மூலமாக பாண்டி மண்டலத்திற்கே அதிபதியாய் அமைந்து, எவ்வளவோ பெரிய பெரிய கோபுரங்களோடு கூடிய பெரிய கோயிலில் நிறைந்த செல்வத்தோடும் எவருக்கும் குறையாத ஆடை அணிகளோடும் ஆபரணங்களோடும் வாழத் தெரிந்தவர் தானே இந்தச் சுந்தரேசர்! ஆதலால், ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கும் மனப் பக்குவத்தோடு, அன்னை மீனாக்ஷியும் இந்த அழகிய சுந்தரேஸ்வரனும் இங்கு ஒரு ஒதுக்குப் புறத்திலே கோயில் கொண்டிருக்கிறார்கள். ஆம். இப்போது விளங்குகிறது; 'காளை தேட, சோமன் அழிக்க, சுந்தரன் சுகிக்க' என்று மக்கள் ஏன் சொல்கிறார்கள் என்று.

இப்படி, காளீஸ்வரரும், சோமேசரும், சுந்தரேசரும் கோயில்கொண்டிருக்கும் ஊர்தான் இன்று காளையார் கோயில் என்று வழங்கப்படுகிறது. இந்தச் சின்னஞ் சிறிய ஊர், மதுரைக்கு நேர் கிழக்கே நாற்பது மைல் தூரத்தில் தொண்டிக்கு செல்லும் ரஸ்தாவில் இருக்கிறது. ரயில் வழியாகச் செல்ல விரும்புகின்றவர்கள் சிவகங்கை ஸ்டேஷனில் இறங்கி கிழக்கே பத்து மைல் தூரம் செல்லவேணும். காரைக்குடி, தேவகோட்டை, சருகணி வழியாகவும் வரலாம். ஊர் சிறிய ஊர்தான் என்றாலும், கோயிலும், குளமும், கோபுரமும், வீதிகளும் பெரியவைகளாகவே இருக்கின்றன. இந்தத் தலத்தை, **அப்பர், சம்பந்தர், சுந்தரர்** மூவரும் பாடியிருக்கிறார்கள். தேவார காலத்தில் இந்தத் தலத்தின் பெயர், **கானப்பேர்** என்றிருந்திருக்கிறது.

கங்காளர், கயிலாய மலையாளர்,
கானப் பேராளர், மங்கை
பங்காளர், திரிசூலப் படையாளர்
விடையாளர் பயிலுங்கோயில்

என்று ஞானசம்பந்தர் கோயிலைப் பாடினால், கோயிலில் உள்ள மூர்த்தியை

ஆனைக்காவில் அணங்கினை
ஆரூர் நிலாய அம்மானைக்
கானப் பேரூர் கட்டியைக்
கானூர் முளைத்த கரும்பினை.

என்று நாவுக்கரசர் பாடி மகிழ்கிறார். இந்தக் கானப் பேரூர் கட்டியாம் கடவுளே சுந்தரர் தேவாரத்தில் 'கானப்பேரூர் உள்ள காளை'யாகிறார்; அதனால் அந்த ஊருக்கு 'காளையார் கோயில்' என்று வழங்கப்படுவதற்கும் காரணம் ஆகிறார். நாவலூர் நம்பியாரூரர் ஸ்தலம் தலமாகச் சென்று இறைவனைப் பாடித் துதித்துவரும் நாளில் தன் அருமை நண்பர் சேரமான் பெருமாள் நாயனாரோடு திருச்சுழியல் என்னும் தலத்திற்கு வந்து சேருகிறார். அங்கு அன்றிரவு துயிலும்போது, கானப்பேர் உறை அண்ணல் அவர் கனவிலே தோன்றுகிறார், காளை உருவிலே. 'செங்கையினிற் பொற் செண்டும், திருமுடியில்ச் சுழியமுடன், எங்குமிலாத் திருவேடம் என்புருக முன்காட்டி, யாம் இருப்பது கானப்பேர்' என்றும் ஞாபகப்படுத்திவிட்டு மறைகிறார். அதனால் சுந்தரர் இந்தக் கானப்பேர் ஊருக்கே வருகிறார். வரும் வழி எல்லாம்,

காதலுறத் தொழுவது என்று கொலோ?
அடியேன்
கார்வயல் சூழ் கானப்பேர் உறை
காளையையே!

என்று ஏங்கி ஏங்கித் துதிக்கிறுர். அன்று முதல் கானப் பேர் என்று வழங்கி வரப்பட்ட ஸ்தலம் **காளையார் கோயில்** என்றே பெயர் பெறுகிறது.

* * *

கைலாயத்தில் ஒரு நாள் பார்வதியும் பரமசிவனும் தனித்திருக்கிறுர்கள். அப்போது ஒரு சந்தேகம் எழு கிறது பார்வதியின் உள்ளத்தில். 'எல்லாம் வல்லவராகிய உமக்கு சகள ரூபம் எதற்கு ?' என்று கேட்டு வைக்கிறுள் அன்னை பார்வதி. அத்தனும் சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரஹம் என்னும் ஐந்தொழிற்காகவே இவ்வுருக்கொண்டிருக்கிறேம் என்று சொல்லிவிட்டு அத்துடன் நிறுத்தாது, 'எனது கண் திறக்கும்போது உலகம் தோன்றும்; விழித்திருக்கும்போது வாழும்; மூடுங்காலத்து அழியும்' என்று அருள்த்திறத்தை மேலும் விளக்குகிறுர். இதைக் கேட்ட அம்மை, பெண் மைக்கே உரிய சந்தேகத்தோடு, இதைப் பரீக்ஷித்துப் பார்த்துவிடத் துணிகிறுள். இறைவன் பின்புறமாக வந்து அவரது கண்கள் இரண்டையும் ஏதோ விளையாட்டாகத் தன் கைகளால் பொத்துகிறுள். அவ்வளவுதான் மூவுல குமே இருளில் புதைந்துவிடுகின்றது. உயிர்கள் எல்லாம் வாடி வதங்கிவிடுகின்றன. அண்ணலும் அம்மையைக் கடிந்து, அவள் தன் கைகளை விலக்குகிறுர். இப்படி ஒரு உத்பாதத்தை ஏற்படுத்தியதற்காக பார்வதியைக் 'கரிய உருவமுடைய காளியாகக் கடவாய்' என்று சபித்துவிடு கிறுர். அம்மை அறியாது செய்த பிழையை மன்னிக்க வேண்டும் என இறைவன் காலடியில் விழுந்து கதற, 'சரி, சண்டாசுரனை வென்ற பின் காளியுருவம் நீங்கித் திரும் பவும் என்னை வந்து சேர்வாய்' என அனுக்கிரகிக்கிறுர். அம்மையும் அரனது ஆணைப்படியே காளியாகிறுர். கானப் பேரூரை அடுத்த மருதவனத்தில் துர்க்கை வடிவிலே கோயில் கொள்கிறுள். இந்தச் சமயத்தில் பெரு வரங்கள் பல பெற்ற சண்டாசுரன் தேவர்களை வருத்த, தேவர்கள் அம்மையிடம் முறையிட, அம்மையும் சண்டாசுரனேடு போர்புரிந்து அவனை முடிக்கிறுள். தேவர்களும் பூமழை

பொழிந்து தேவியை வாழ்த்துகிறார்கள். தேவியின் சாபமும் நீங்குகிறது. சாப விமோசனம் பெற்ற இந்தக் காளியம்மையே அழகெலாம் திரண்ட **சுவர்ண வல்லியாகி**, கானப்பேரூரில் கோயில்கொண்டிருந்த காளீசரை மணந்து, அவரது இடப்பாகத்தில் வீற்றிருக்கிறாள். காளையார் கோயிலைச் சுற்றியுள்ள சின்னஞ்சிறிய ஊர்கள் எல்லாம் இந்தப் புராண வரலாற்றை இன்றைக்கும் பறை சாற்றிக்கொண்டிருக்கின்றன. தேவர்கள் தேவியைக் கண்டு குறை இரந்து நின்ற இடமே **கண்டதேவி**. தேவி தங்கியிருக்க தேவர்கள் நிருமாணித்துக் கொடுத்த கோட்டையே **தேவிகோட்டை**. அம்மை சண்டாசுரனை வெற்றி கண்ட இடமே **வெற்றியூர்**. சண்டாசுரனது தேரில் உள்ள கொடி இற்று வீழ்ந்த இடமே **கொடிக்குளம்**. அவன் மாண்டு மடிந்து விழுந்த இடமே **மாளக்கண்டான்**. வெற்றி பெற்ற தேவியை பூமழை பொழிந்து தேவர்கள் வாழ்த்திய இடமே **பூங்குடி** என்று இன்றும் வழங்கப் பெறுகின்றன. சூலமும் பாசமும் ஏந்தி, வீரப்பல்லுடன், கோரக் கண்களுமே பெற்று, அனல் எரியும் அணிமகுடம் தாங்கி, வீரத் திருவுருவாய் நிற்கும் அந்தக காளியையும், அழகே வடிவாய், அண்ணலைத் தழுவும் அதிசயவல்லியாய் கன்னங் கருத்த விழியும், பொன்னம் பெருத்த தனமும் தாங்கி, ஒயிலாய் நிற்கும் அந்த சுவர்ணவல்லியையுமே பார்க்கிறீர்கள் பக்கத்தில் உள்ள படங்களிலே. என்ன மாற்றம், இந்த சுவர்ணவல்லியாம் எழில் உருவிலே. ஆம். இரண்டு திருவுருவமும் பஞ்சலோகங்களால் வார்க்கப்பட்ட செப்புச் சிலைகள் தான் என்றாலும், சுவர்ணவல்வி சுவர்ணத்தாலேயே ஆக்கப்பட்டவளோ, என்றுதான் தோன்றுகிறது.

இப்படி, காளியுருவில் இருந்த பார்வதியாம் பரமேட்டியை மணந்த ஈஸ்வரனே **காளீஸ்வரனாகிறான்**. அந்த சுவர்ண வல்லியையும் தன் இடப்பாகத்தில் ஏற்றருளிய பின் **சுவர்ண காளீஸ்வரனாகவே** மாறுகிறான். இன்றும் காளையார் கோவில் மூல மூர்த்தி சுவர்ணகாளீஸ்வரன் என்றுதானே அழைக்கப்படுகிறான். காளீஸ்வரன் கானப்பேர் ஊரில் கோயில் கொண்டிருக்கும்போது இந்தப் பாண்டிய நாட்டை

ஆண்டவன் **வீரசேனன்.** அவனுக்குப் பழவினை வசத்தால், குழந்தை இல்லை. அதனால் இவனும் இவன் மனைவி சோபனாங்கியும் சுவர்ணத்தால் ஒரு பிள்ளையைச் செய்து வைத்து அதைப் பார்த்துப் பார்த்து திருப்தி அடைகிறார்கள். சுவர்ணகாளீஸ்வரனை வணங்க வந்த இந்தத் தம்பதிகள், கோயிலை அடுத்த உருத்திர தீர்த்தத்தில் முங்கி முழுகி எழுகிறார்கள், சுவர்ணப்பதுமையோடு. இறை அருளால் அந்த சுவர்ண புத்திரன் உயிர் பெறுகிறான். உடனே இறை அருளை நினைந்து, அங்கு கோயில் கொண்டிருந்த **காளீசர் சுவர்ணவல்லி, சோமேசர் சௌந்திரவல்லி** இருவருக்கும், கோயில்கள் எடுப்பித்து, நித்திய நைமித்திக காரியங்களுக்கும் உத்சவாதிகளுக்கும், ஏராளமான நிபந்தங்களை ஏற்படுத்துகிறான். இந்த இரண்டு பெருமான்களை வணங்கி வாழ்த்துவதோடு அவன் திருப்தி அடையவில்லை. தன்னுடைய வழிபடு தெய்வமாகிய **சோமசுந்தரரையும் மீனாக்ஷி யையும்** தரிசித்து வணங்காமல், தினமும் அவன் உணவு உண்பதில்லை. காளீசர் கோயில் கட்டும் திருப்பணியில் ஈடுபட்டிருக்கும் போதும், தினமும் மதுரை வந்து சோமசுந்தரரை தரிசித்துவிட்டு கானப்பேருருக்குத் திரும்பி வருகிறான். ஒரு நாள் அடைமழை காரணமாக கானப்பேரூரில் இருந்து மதுரை வந்து திரும்ப முடியவில்லை. அதனால் உணவே அருந்தாமல் அயர்ந்திருக்கிறான். அந்தச் சமயத்தில் அச்சோமசுந்தரனே பாண்டிய மன்னன் வீரசேனன் கனவில் தோன்றி "இனி நீ இங்கு வர வேண்டியதில்லை, நாமே அங்கு வந்து காளீஸ்வரனுக்கும் சுவர்ண வல்லிக்கும் இடையிலே வீற்றிருப்போம்" என்று சொல்லி மறைகிறான். விடிந்து எழுந்து பார்த்தால் குறிப்பிட்ட இடத்தில் ரிஷபத்தின் அடிச்சுவடுகள் தோன்றுகின்றன. அந்த இடத்திலே அவசர அவசரமாக மீனாக்ஷி சுந்தரேசனுக்கு கோயில் எழுகிறது. அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாய் அரன், இங்கு சோமாஸ்கந்த உருவத்திலே எழுந்தருளுகிறான். சோமசுந்தரன் கம்பீரமாக வீற்றிருக்கிறான். அவன் சொல்வதை ஆர்வத்துடன் கேட்கத் துடிக்கும் கோலத்தில் அம்மை அவன் பக்கமே திரும்பி இருக்கிறாள். இந்த திருவுருவத்தைக் கண்டுதானே அப்பர் இறைவனை **"வாக்கை நோக்கிய மங்கை மணாளன்"** என்று

வாயாரப்பாடி மகிழ்கிறார். ஆம். அந்த வாக்கை நோக்கும் மங்கையையும் அந்த மங்கையை மணந்த மணாளனையுமே பார்க்கிறீர்கள் பக்கத்தில் உள்ள படத்திலே.

இந்த இறைவன் ஏகபத்தினி விரதன் என்பதை அறிவோம். இவனை மணந்த மங்கை இவன் வாக்கை நோக்கி நின்றால், இவன் இந்த மங்கையைத் தவிர வேறு எவரையும் நோக்கியதில்லை. இந்த விஷயத்தில் இவன் தன் மைத்துனன் அந்தக் கோபால கிருஷ்ணனுக்கு நேர்மாறு. இப்படி எல்லாம் இருந்தவனே இந்தத் தலத்தில் மட்டும் இருவருக்கு இனியானாக மாறுகிறான். அதற்காக ஒரு நாடகமே நடிக்கிறான். வீரசேன பாண்டியன் குமாரனான சுவர்ணபுத்திரனே தந்தைக்குப் பின் **வரகுண பாண்டியன்** என்னும் பெயரோடு அரசுரிமை ஏற்கிறான். தன்மேல் படைகொடு வந்த சோழனுக்கன் என்னும் சோழனை வென்று சிறையில் அடைக்கிறான். பின்னர் அந்தச் சோழ அரசன் வேண்டியபடியே அவனுடன் சமாதானம் செய்து கொள்கிறான்; அவன் தன் மகளையும் மணக்கிறான். ஆனால் அன்றிரவிலே, மணவறையிலே சோழன் மகளின் கூந்தலில் இயற்கை மணம் கமழ்கின்றது. இத்தகைய சுகந்த கேசத்தை உடைய பெண், மானிடப் பெண்ணாக இருத்தல் இயலாது, தெய்வ மகளாகவே இருக்கவேண்டும் என நினைத்து, அவளை இரவுக்கிரவே அழைத்துச் சென்று காளீசரிடம் சேர்த்து விடுகிறான். அவர் தட்டிக் கழிக்கப் பார்த்தாலும், இவன் விடாப்பிடியாய் ' இந்த **சுகந்த கேசி** உமக்கே உரியவள்' என்று சொல்லி அவளை அவர் ஏற்றுக் கொள்ள வேண்டுகிறான். காளீசரும் வேறு வழியின்றி தன் கைகளை நீட்டி சுகந்த கேசியைத் தழுவி தன்னோடு ஐக்கியப்படுத்திக் கொள்கிறான். ஆம். இதனால் இந்தக் காளீசன், தான் எனும் தன்மையை இழந்து விடுகிறான், ஒரு பாதியை சுவர்ணவல்லி ஆக்கிரமித்துக் கொள்ள, மற்றொரு பாதியில் சுகந்தகேசி புகுந்துகொள்கிறாள். அந்தச் சோதிவனமே அன்று முதல் சுகந்த வனமாகிறது. இந்த சுகந்தகேசியும், அந்த சுவர்ணவல்லியும் அன்னை பார்வதியின் அவதார மூர்த்தங்களே என்று தெளிவு

பட்டால்தான், இந்த இறைவன் ஏகபத்தினி விரதத்தை விட்டுவிட்டவன் என்ற பழி நீங்கும்.


காளீசர், சோமேசர், சுந்தரேசர் மூவரும் கோயில் கொண்டிருக்கும் இந்தக் கோயிலுக்கு மேல் புரத்திலே ஒரு பெரிய தெப்பக்குளம். இக்குளம் மதுரை மாரியம்மன் தெப்பக்குளம்போல அவ்வளவு பெரியதொன்று அன்று என்றாலும், அமைப்பு எல்லாம் அதே போலத்தான். குளத்தின் நடுவில் இருக்கும் நீராழி மண்டபமே ஒரு பெரிய கோபுரம் உடைய சிறிய கோயிலாகவும் அதைச் சுற்றி நான்கு மூலைகளிலும் கோபுரங்களோடு அமைந்த மண்டபங்களாகவும் இருக்கின்றன. இந்தக் குளத்தைத் தான் ஆனைமடு என்கிறார்கள். ஆம். ஆனை இறங்கினாலும் அதை முழுகடிக்கும் ஆழமுடையது என்று தெரிகிறது. என்றாலும் இந்தக் குளம் எப்படி ஏற்பட்டது, அதற்கு ஆனை மடு என்று ஏன பெயர் வந்தது என்பதற்கு ஒரு ரஸமான கதை. தேவேந்திரனது ஐராவதம் என்னும் வெள்ளையானை, கைலாயம் போய்த் திரும்பி வருகிறது. விளையாட்டாக, அங்கிருந்த ரிஷபத்தின் வாலைப் பிடித்து இழுத்திருக்கிறது. ரிஷபம் ஆன நந்திக்கோ ஒரே கோபம். உடனே, "நீ காட்டானையாய் பூமியில் பிறந்து, ஆயிரம் வருஷம் வருந்தக் கடவாய்" என்று சாபமிட்டுவிடுகிறது. நந்தியிட்ட சாபத்திற்கு விமோசனத்தை நாயகனே நல்கு கிறான். அதனால் காட்டானையாய் பிறந்து வளர்ந்த ஐராவதம்; இத்தலத்திற்கு வந்து, தன் கொம்புகளாலேயே குத்திக் குத்தி இந்த தடாகத்தை உண்டாக்கி, இந்தத் தடாகத்திலுள்ள தண்ணீரையே தன் துதிக்கைகளால் முகந்து கொண்டுவந்து காளீசர், சோமேசருக்கு எல்லாம் அபிஷேகம் செய்ய, சாப விமோசனம் ஆயிற்றாம். அன்று முதல் இந்தத் தடாகம் ஆனைமடு என்றே வழங்கப் படுகிறது.

இந்தக் காளையார் கோயில் என்னும் கானப்பேர், மிகவும் பழைமையான ஊர் என்று தெரிகிறது இந்த ஊரைச் சுற்றி ஒரு கோட்டை இருந்திருக்கிறது அந்தப் பழைய சங்க காலத்திலேயே. அப்போது பாண்டிய

நாட்டை ஆண்ட மன்னன் தான் **உக்கிரப் பெருவழுதி.** இவனே திருக்குறள் அரங்கேறும்போது அரியாசனத் திருந்த பெருமகன். இவன் அப்போது அந்தக் கானப் பேரூரில் இருந்த வேங்கைமார்பன் என்னும் சிற்றரசனை வென்று அவன் கோட்டையைக் கைப்பற்றி இருக்கிறான். அதனால் 'கானப்பேரூர் எயில் எறிந்த உக்கிரப் பெரு வழுதி' என்ற விருதைப் பெற்றிருக்கிறான். இதைப் பேசுகிறது புறநானூறு என்னும் சங்க இலக்கியம். சோழ மன்னர்களும் பாண்டிய மன்னர்களும் இக்கோயிலைக் கட்ட வும் பராமரிக்கவும் வேண்டியவைகளை எல்லாம் செய்திருக் கிறார்கள். கி. பி. பதினான்காம் நூற்றாண்டில் முகம்மதியர் தென்னாட்டின்மீது படை எடுத்தபோது, ஸ்ரீரங்கத்து ரங்க நாதரையும் தீர்த்துக் கட்டிவிடுவாரோ என்று அஞ்சி அங்குள்ள கர்ப்பக் கிரஹத்தைச் சுற்றி சுவர் எழுப்பி மறைத்துவிட்டு, பிள்ளை லோகாச்சாரியார் என்பவர், ரங்க நாதரையும், ரங்கநாயகியையும் இந்த கானப்பேரூருக்கே கொண்டுவந்து ஒரு சிறு கோயிலை அமைத்து அங்கு வைத்துக் காப்பாற்றி இருக்கிறார். இது எல்லாம் பழைய கதை.

இந்தக் கோயில் திருப்பணியிலே சமீப காலத்திலே முழுவதும் ஈடுபட்டவர்கள் சிவகங்கைச்சீமை **பெரிய மருது, சின்ன மருது** என்ற பாளையப்பட்டுகாரர்களே. சோமநாதரது கோபுரத்தை பெரிதாகக் கட்டிய பெருமை பெரிய மருதுவையே சாரும்.

இந்தக் கோபுரத் திருப்பணிக்கு செங்கல் இந்தக் கோயிலிலிருந்து தென்மேற்கே பன்னிரண்டு மைல் தொலை யில் உள்ள மானாமதுரையிலிருந்தே வந்ததாம். விரைவாக வந்து விரைவாக வேலை முடியவேணும் என்பதற்காக, வழி நெடுக ஆட்களை நிறுத்தி, செங்கல் ஒவ்வொன்றாக ஒருவர் கையிலிருந்து ஒருவர் கைமாறி காளையார் கோயில் வந்து சேர்ந்தது என்கிறார்கள். எவ்வளவு ஆள் பலமும், எவ் வளவு செல்வாக்கும், எவ்வளவு பக்தியும், சிரத்தையும் இருந்தால் இப்படி வேலை நடந்திருக்கும் என்று எண்ணிப் பார்த்துக்கொள்ளலாம் நாம். ஆங்கிலேயர் இங்கு வந்து



காலூன்றி நிற்க நினைத்தபோது, அவர்களை எதிர்த்துப் போரிட்டவர்களில் முதன்மையானவர் இந்த மருது சகோதரர்கள். போரில் பிறரது வஞ்சனையால் மருது சகோதரர்கள் தோற்றிருக்கிறார்கள். தோற்றவர்களில் பெரியமருது ஆங்கிலேயர் கையில் அகப்படாது தலை மறைவாய் இருந்திருக்கிறார். இவர் இருக்கும் இடத்தையே கண்டுபிடிக்க முடியவில்லை. ஆங்கிலத் தளகர்த்தன் கர்னல் அக்னியூவுக்கு என்னது செய்வது என்றே தெரிய வில்லை. அப்போது அறிகிறான், இவர் இந்தக் கோபுரம் கட்டிய அருமையை. உடனே தோன்றுகிறது, ஒரு யுக்தி. சரி, இன்றைக்கு பத்தாவது நாள் இந்தப் பெரியமருது வந்து அடிபணியாவிட்டால் இவர் கட்டிய இந்தக் கோபுரம் தரைமட்டமாக்கப்படும் என்று ஊர் ஊராகத் தெருத் தெருவாகத் தண்டோரா போடச் சொல்கிறான். பெரிய மருதுவின் காதில் விழுகிறது தண்டோராச் சத்தம். கட்டிய கோபுரம் தரைமட்டமாக்கப்படுவதைவிட தன் தலையையே கொடுப்பதே சரி, என்று எண்ணுகிறார். குறித்த நாளிலே வந்து தளகர்த்தனிடம் சரண் அடை கிறார். தளகர்த்தனும் இவரது கலை உணர்வை, பக்தியை எல்லாம் மதிக்கிறான், என்றாலும், மேலதிகாரிகளின் உத் திரவுப்படியே இவரைத் தூக்கிலிட ஏற்பாடு செய்கிறான் அந்தச் சமயத்தில் அவர் வேண்டிக்கொண்டபடியே காளீசர் சந்நிதிக்கு நேரே உள்ள ஒரு பொட்டலில் அவருக்கு சமாதி எழுப்பவும் ஒத்துக்கொள்கிறான். இப்படி இன்றும் சமாதியிலிருந்து சோமேசரையும் காளீஸ்வரரையும் வணங்கிக்கொண்டிருப்பவரது, சிலா உருவமே, சின்ன மருதுவின் திருவுருவத்துடன் காளீசர் சந்நிதி வாயிலில் இன்றும் நின்று கொண்டிருக்கிறது.

இப்படி பக்தி சிரத்தையோடு பெரியமருதுபாண்டிய னால் கட்டப்பட்டதும் உயிர் கொடுத்துக் காப்பாற்றப் பட்டதுமான கோபுரத்தையே பார்க்கிறீர்கள் பக்கத்திலே.

சமீப காலமாகப் பழுதுற்றிருந்த இந்தக் கோபுரத்தை வெகு துரிதமாக மிகுந்த பணச் செலவில் மருதுபாண்டியர் அடிச்சுவட்டில் இந்தக் காலத்தில் புதுப்பித்தவர் யார் என்று தெரியுமா? அவர் தாம் கோவை சோமசுந்தரம் மில் அதிபர் தேவகோட்டை திரு. பி. எஸ். எஸ். சோமசுந்தரஞ் செட்டியார். வயது குறைந்தவர் தான் என்ருலும், நிறைந்த மனது பெற்றிருக்கிருர். அவர் பணி சிறக்க என்று வாழ்த்துகிறேன்.



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருக்கானப்பேர் தலவரலாறு

சீர்மன்ன விளங்குமறை சிரத்து மேவுஞ்
சிற்பரமாய் சிதானந்தத் தேற லாகி
வார்மன்ன வளந்திறுகிக் குழைந்து பூணர்
வனமுலையோ மாபோக வரம்ப தாகி
பார்மன்ன வழித்தருளே படிவ மாகப்
பங்கயன்மால் முதலானோர் பணிந்து வேண்டக்
கார்மன்னு மிடற்றானைக் கானப் பேரூர்
காளையெனும் பெருமானைக் கருத்துள் வைப்பாம்

(காளைநாயகர் புராணம்)

அநாதிமலமுத்த சித்துருவாயும், அகண்ட பரிபூரண சச்சிதானந்தப் பரம்பொருளாயும் விளங்குகின்ற சிவபெருமான் அநாதிமல பெத்தர்களாய் காமியம் செய்து வீண் காலம் கழித்துப் பவக்கடலுள் மூழ்கிக் கரை காணாது வருந்துகின்ற ஆன்மாக்களை முத்திக் கரையில் சேர்ப்பிக்கும் வண்ணம் எழுந்தருளி வீற்றிருக்கும் தலங்கள் மிகப் பலவாம்.

அவற்றுள், சைவ சமய பரமாசாரியர்களாகிய, **திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள்** ஆகிய பெருமக்களின் பாடல் பெற்ற தலங்கள் சிறப்புடையனவாம். அவற்றுள் பதினான்கு தலங்கள் பாண்டி நாட்டில் இருக்கின்றன. அவையாவன: திருவாலவாய், திருப்புனவாயில், திருக்குற்றாலம், திருவாப்பனூர், திருவேடகம்,

திருநெல்வேலி, திருவிராமேச்சுரம், திருவாடானை, திருப் பரங்குன்றம், திருக்கானப்பேர், திருக்கொடுங்குன்றம், திருப்பூவணம் என்பனவாம்.

இவற்றுள் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் சிறப் புற்று விளங்குவது திருக்கானப்பேர் என்னும் திவ்வியத் தலமாகும். அத்தலமே இப்பொழுது காளையார் கோயி லென வழங்கப்படுகிறது.

தலவிசேடம்.

இத்தலத்தின் பெருமை சிவபெருமானால் உமாதேவி யாருக்குத் திருவாய்மலர்ந்தருளப் பெற்றபொழுது கேட் டுக் கொண்டிருந்த முருகப்பெருமான் அகத்திய முனிவருக் குக்கூற, அவர் உதங்க முனிவருக்கு உரைக்க, அவர் சதா நீக மகாராஜனுக்குச் சொல்லியதாக வியாச முனிவர் பதினெண் புராணங்களுள் சூரிய புராணமாகிய பிர்ம கைவர்த்தத்திற் கூறுகின்றார்.

இத்தலம், **தெட்சண காளிபுரம், சோதிவனம், மந்தாரவனம், மோட்சப்பிரதம், சைவ க்ஷேத்திரம், காந் தாரம், தவசித்திகரம், தேவதாருவனம், பூலோக கயி லாசம், அகத்திய க்ஷேத்திரம், மகாகாளபுரம்** என்னும் பல பெயர்களைப் பெற்றிருக்கின்றது.

தீர்த்த விசேடம்.

இங்குள்ள தீர்த்தங்கள்: **சிவகங்கை, காளிதீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், சரசுவதி தீர்த்தம், கௌரி தீர்த்தம், இலக்குமி தீர்த்தம், திக்குப்பாலகர் தீர்த்தங்கள், சுதரி சன தீர்த்தம், உருத்திர தீர்த்தம், சந்திர புட்கரணி முதலியனவாம்.**

இறைவனை இத்தலத்தில் வழிபட்டுப் பேறு பெற்றோர்

அகத்தியர்:-

இம்முனிவர் பெருமான், இத்தலத்தையடைந்து சிவ கங்கையில் மூழ்கி ஆண்டவனது உண்மை உருவத்தை உணர்ந்தனர். அதனால் இத்தலம் **அகத்திய க்ஷேத்திரம்** என்ற திருநாமம் பெற்றது.

உமாதேவியார்:-

சிவபெருமானுடைய திருக்கண்களை விளையாட்டாகத் தன் கைகளாற் பொத்திய குற்றத்திற்காகச் சாபம் பெற்ற உமாதேவியார் காளி உருவத்தோடு பூவுலகத்தில் வாழ்ந்து வந்தனர்.

அக்காலத்தில் பெருவரத்தை ஆண்டவனிடம் பெற்ற சண்டாசுரனின் தீச் செயல்களால் வருந்திய திருமால் பிரமன், இந்திரன், முதலிய தேவர்கள், ஆண்டவன் கட்டளைப்படி அம்மையிடம் வேண்ட, அம்மை சண்டாசுரனோடு போர் செய்து அவனைக் கொன்று வெற்றிபெற்றாள்.

சண்டாசுரவதம் வேண்டித் தேவர்கள் தேவியைக் கண்ட இடமே **"கண்டதேவி"** என்றும் அவள் தங்கி இருக்க நிருமித்த கோட்டையே **"தேவிகோட்டை"** அல்லது **தேவகோட்டை** என்றும், அவ்வம்மையே கோட்டையம்மன் அல்லது பத்திரகாளி என்றும், அம்மை சண்டாசுரனை வெற்றிகொண்ட இடமே **"வெற்றியூர்"** என்றும், சண்டாசுரனுடைய தேர்க்கொடி முறிந்த இடமே **"கொடிக்குளம்"** என்றும், அவனுடைய அம்புகள் வீழ்ந்த இடமே, **"மாளக்கண்டான்"** என்றும், வெற்றி கண்ட தேவர்கள் பூமழை பொழிந்த இடமே **"பூங்குடி"** என்றும் தற்காலத்தில் வழங்கப்படுகின்றன.

சண்டாசுரவதத்தின் பின்னர் காளியானவள் சோதி வனத்தையடைந்து ஸ்ரீ காளீசப் பெருமானைப் பூசித்துக் கரிய உருவம் நீங்கப் பெற்றுச் சுவர்ணவல்லியாகி சோமே சரை வழிபட்டுக் கலந்து! சௌந்தரநாயகியைத் தொழுது, காளீசரை மணந்து கருணைக்கடலாக வீற்றிருக்கின்றாள். இத்தலத்திலுள்ள சிவகங்கையில் மூழ்கித் திருவருள் பெறாத தேவர்களே இல்லை எனலாம்.

திருமகள்:-

வாலகில்லியரென்னும் தபோதனரின் சாபத்தால், மானிடவுருப் பெற்ற இலக்குமியானவள், இத்தலத்தை யடைந்து வழிபட்டு, தனது உண்மை உருவத்தை அடைந் தாள். தன்பெயரால் ஒரு தீர்த்தமும் உண்டாக்கினாள். அத்தீர்த்தமே இலக்குமி தீர்த்தமாகும்.

சுதரிசனம்:-

திருமாலினது சக்கரமாகிய சுதரிசனம்; ஒரு காலத்துப் பகைமேற்சென்று மழுங்கி, இத்தலத்தை வழிபட்டு ஒளி பெற்றது. தன்பெயரால் ஒரு தீர்த்தத்தையும் அமைத் தது. அத்தீர்த்தமே சுதரிசன தீர்த்தமாகும்.

திக்குப்பாலகர்கள்:-

திக்குப்பாலகர்கள் எண்மரும் இத்தலத்தை வழி பட்டுப் பேறு பெற்றனர். குபேரன் பூசித்துப் பேறு பெற்றமையால் இத்தலத்திற்குத் தென்னளகாபுரி எனப் பெயர் வரலாயிற்று. இவர்கள் பெயரால் அமைந்ததே திக்குப்பாலகர் தீர்த்தமாகும்.

உருத்திரர்கள்:-

ஆயிரங்கோடி உருத்திரர்களும் கொண்ட அகந்தை யால் அம்மையார் அவர்களை அயிரை மீன்களாகும்படி சபிக்க, அவர்கள் கானப்பேரை அடைந்து உருத்திர தீர்த்

தத்தில் மூழ்கியதால் சாப நீக்கம் பெற்றூர்கள். இத்தீர்த் தமே உருத்திர தீர்த்தமாகும்.

தேவதாச பாண்டியன் :-

காசிக்குச் சென்று கங்கை நீரைக் கொண்டு வந்து காளீசருக்கு ஆட்டக் கருதிய தேவதாச பாண்டியனுக்குச் சிவகங்கைத் தீர்த்தத்தின் மகிமையை ஸ்ரீ காளீசப்பெருமானே எடுத்துக்கூறி அந்நீராடுதலேயே விரும்பியருளினர்.

வீரசேன பாண்டியன் :-

இப்பாண்டியன் மகப்பேறில்லாமையால் பெரிதும் வருந்தி ஒரு பொற்பதுமையை வைத்து அதனைக் கண்டு களித்து அதனுல் தனது துன்பத்தை ஆற்றி வந்தான் அம்மன்னன் இத்தலத்தின் மகிமையைக் கேள்வியுற்று, இத்தலத்திற்கு வந்து வழிபட்டு உருத்திர தீர்த்தத்தில் தன்னுடைய பொற்பதுமையுடன் மூழ்க, பொற்பதுமையானது, உண்மையான குழந்தையாகித் தன்னைக் கட்டித் தழுவக் கண்டு பெரிதும் மகிழ்ந்தான்.

வரகுணபாண்டியன் :-

இவனுக்குச் சோழ மன்னன் கொடுத்த "சுகந்தகேசி" என்னும் மங்கையை காளீசருக்கு அவன்தர, பெருமான் அவளைப் பெற்றுத் தமது இலிங்கவுருவத்தில் கலந்து கொண்டனர்.

மற்றொரு பாண்டியன் பொருட்டு, ஆலவாய்ச் சொக்கர் அங்கயற்கண்ணம்மையுடன் இங்கு எழுந்தருளி அவன் வேண்டுகோட்கிணங்க இங்கேயே தங்கியருளினர். ஒரு காரணத்தை முன்னிட்டு எழுந்தருளிய மூர்த்தியாதலால் இவ்விலிங்கம் "**காரணலிங்கம்**" எனப் பெயர்படும் என ஆன்றோர் கூறுவர் (இப்பாண்டியனின் திருவுருவம் சுந்தரேசராலயத்தின் திருவாயிலுக்குப் பக்கத்தே அமைந்திருப்பதை இன்றுங் காணலாம்)

விக்கிரமசோழன் :-

விக்கிரமசோழன், காளீசரை வணங்கிப் புத்திரப் பேறடைந்து "தாளவனம்" என்னும் நாட்டரசன் கோட்டையில், கண்ணுடைய நாயகி ஆலயத்தின் தென்பாகத்தில் தன் பெயரால் ஒரு இலிங்கம் தாபித்துப் பூசித்துப் பேறு பெற்முன்.

புட்கரன் :-

குருபத்தினியைப் புணர்ந்த குற்றவாளியாகிய புட்கரன் என்னும் அந்தணனது பாவம், இத்தலத்தை வழிபட நீங்கிற்று.

பேய்கள் :-

விந்தியமலையை அடுத்த வனத்தில் திரிந்துகொண்டிருந்த ஐந்து பேய்கள், கௌதமர் சொற்படி கானப்பேரையடைந்து வழிபட்டு நற்கதி பெற்றன.

கௌதம முனிவர் :-

இத்தலத்தில் கௌதம முனிவர் ஞானோபதேசம் பெற்ருர்.

கங்கை முதலிய தீர்த்தங்கள் :-

இத்தலத்திலுள்ள உருத்திர தீர்த்தத்தில் மார்கழி மாதப் பூரணையில், கங்கை முதலிய புண்ணிய நதிகள் வந்து மூழ்கித், தங்கள் பாவங்களைப் போக்கிக்கொள்ளுகின்றன.

வெள்ளையானை :-

நந்தியெம்பெருமானிடம் தருக்குற்ற தேவேந்திரனின் வெள்ளையானை, காட்டானையாகும்படி சாபம் பெற்று, இத்தலத்தையடைந்து தனது கொம்பினுல் தோண்டிய

"ஆனைமடு" என்னும் தீர்த்தத்தில் மூழ்கிச் சோமேசரை யும் காளீசரையும் வழிபட்டுச் சாபம் நீங்கப் பெற்றது.

இந்திரன் :-

கைலையில் தருக்குற்ற தேவேந்திரன் சிவபெருமானால் சாபம் பெற்று, இத்தலத்தை அடைந்து சோமேசருக்கும் காளீசருக்கும் பற்பல திருப்பணிகள், திருவிழாக்கள் செய்து சாப நீக்கமும், நல்வரங்களும் பெற்றான். ஆண்டு தோறும் வைகாசி மாதம் பூரணையில் இந்திரன் வழிபாடு இத்தலத்தில் நடைபெறுகிறது.

சுசரிதன் :-

கண்ணுவர் என்னும் அந்தணர் மகன் சுசரிதனுக்கு ஏற்பட்ட கயரோகம் ஆனைமடுவில் மூழ்கி ஆண்டவனை வழிபட நீங்கிற்று.

தேவசேனன் :-

தேவசேனனென்னும் அரசன் அறியாமையால், ஒரு முனிவரைக் கொல்ல அதனால் அவனைச் சார்ந்த பிரம கத்திதோடம், இத்தலத்து வழிபாட்டால் நீங்கியது.

மகாகாளன் :-

காசிப முனிவரால் ஊமையாகும்படி பெற்ற மகாகாள னின் சாபம் இத்தலத்து நீங்கிற்று.

சுந்தரர் :-

திருவிராமேச்சுரத்தை வழிபட்டு ஈழநாட்டுத் திருக்கே தீச்சரத்தைச் சொன் மலர் மாலைகள் சாத்தித் தொலை விலேயே தொழுதமர்ந்த நம்பியாரூரரும், சேரர்பெருமா னும், திருச்சுழியலை அடைந்து, கருச்சுழியில் வீழாமற் காக்கும் கடவுளைப் போற்றி மகிழ்ந்தனர். அவ்வாறு தங்கி யிருக்கும் சமயம் இரவில் கனவினிடத்துக் காளையாம்

திருவடிவத்தோடு செங்கையினிற் பொற்செண்டும் திருமுடியிற் சுழியமும் உடையவராய் இறைவன் எங்குமிலாத் திருக்கோலத்தை என்புருகும்படி காட்டி "யாமிருப்பது கானப்பே"ரென்று கூறி மறைந்தருளினர். ஞானப்பேராளராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாங்கண்ட அருட்காட்சியைச் சேரமான் பெருமாள் நாயனருக்கும் மொழிந்தருளி, சுழியற்புனிதன் கழல் வணங்கிப் புறப்பட்டுத் திருக்கானப்பேற்றை அடையும்பொழுது "கண்டு தொழப் பெறுவது, என்று கொலோ, அடியேன் கார்வயல் சூழ் கானப் பேருறை காளையையே" என முடியும் திருப்பதிகத்தை அருளிச்செய்துகொண்டே காளையார்கோவிலை அடைந்து கானப்பேருறை கண்ணுதற்பெருமானைக் கண்களால் பருகி மகிழ்ந்தனர்.

இன்னும் சந்திரன், தேவராதன் முதலாக இத்தலத்தை வணங்கி நற்பேறுகள் பெற்றோர்களும், பெறுகின்றவர்களும், பெறுபவர்களும் பலர்.

இத்தலவரலாறு கந்தபுராணத்துச் சங்கர சங்கிதையில் க்ஷேத்திர காண்டத்திலும், உருத்திர சங்கிதையில் பதினன்காவது காண்டத்திலும் கூறப்பெற்றுள்ளது.

திருச்சிற்றம்பலம்.

திருக்கானப்பேர் காளைநாயகர் புராணம்

ஆசிரியர் வரலாறு:

திருத்தொண்டின் நெறிவளர்க்கும் திருவாரூர்ப் பெரும்பதியில் பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த ***" அகோர மாதவர் "*** *என்னும் சைவ மாமுனிவர், காந்தபுராணத்து உருத்திர சங்கிதையில் பதினான்காம் காண்டத்தில் கூறியவண்ணம் சைவ முத்தமிழும் உய்யும் வண்ணம் "காளைநாயகர் புராணம்" என்னும் பெருநூலைத் திருவாய்மலர்ந்தருளினார்கள். இப்பெரியார், பூமருவுகங்கை முதல் புனிதமாம் பெருந்தீர்த்தம், மாமகந்தான் ஆடுதற்கு வந்து வழிபடுமிடமாகிய கும்பகோணத்திற்கும் வரலாறு பாடியுள்ளார்கள். இப்பெரியார் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதினத்து அடியார் குழாத்தில் ஒருவராகத் திகழ்ந்தனர் என்பர்.*

இப்புராணம் பதினாறு சருக்கங்களைக் கொண்டது அறுநூற்றறுபது செய்யுட்களை உடையது. செய்யுள் தோறும் சைவமணம் கமழ்கின்றது. திணைமயக்கம், யமகம், திரிபு முதலிய கவிநயங்கள் பெரிதும் வாய்ந்தது. இந்நூல் இதுவரை அச்சேறிப் புத்தக வடிவில் வரவில்லை. இந்நூல் முழுவதும் ஏட்டுச் சுவடியிலிருந்து, திருவருளின் துணைகொண்டு, சிவபூஜா துரந்தார், ***தி. ராம. தி. சு. திண்ணப்ப செட்டியாரவர்கள்*** *உதவியினால் படியெடுக்கப்பட்டுள்ளது. இத்தலத்தை வழிபடவரும் அன்பர்களுக்கு உதவியாக இருக்கும்வண்ணம் இப்புராணத்தில் கூறப்படும் செய்திகள் இங்கு சுருக்கி எழுதப்பட்டுள்ளன.*

1. திருநாமச் சருக்கம்:

தரும உருவமாகிய இடபமானது பூசித்துப் பேறு பெற்றமையால் "இடபபுரி" என்னும் திருநாமத்தை இத் தலம் பெற்றமையும், காளிபூசித்துப் பேறுபெற்றமையால் "காளிபுரி" என்னும் திருநாமத்தை இத்தலம் பெற்றமை யும், மகாகாளன் பூசித்துப் பேறுபெற்றமையால் காளபுரி எனப் பெயர் பெற்றமையும் இச்சருக்கத்தில் விளக்கப் படுகின்றன.

2. இலிங்கவுற்பத்தி தேவதாருவனச் சருக்கம்:

உமாதேவியார் தேவதாரு விருட்சத்தின் கீழ் இத் தலத்திலமர்ந்து பூசித்தமையால், இறைவன் சுயம்பு மூர்த் தியாக எழுந்தருளினர். அம்மையை சொர்ணவல்லியாகப் பக்கத்திலிருக்கச் செய்தார். அதிலிருந்து இத்தலம் **தேவதாருவனம்** எனப் பெயர்பெற்றது.

3. கானப்பேர் பிரமபுரியான சருக்கம்:

பிரம தேவர், இத்தலத்தையடைந்து தவஞ்செய்து நாமகளையும், மற்றும் பிறபேறுகளையும் பெற்றார். கானை நாயகருக்குத் திருப்பணிகள் பலசெய்து மகிழ்ந்தார். அது முதல் இத்தலம் **பிரமபுரி** எனப் பேர்பெற்றது. இத்தல விநயகர், பிரம விநயகர் எனப் பெயர் பெற்றார்.

4. திருவும் மாயனும் மருவிய சருக்கம்:

தன்னை மதியாது இன்பத்தில் மூழ்கியிருந்த திருமாலை யும் இலக்குமியையும், வாலகில்லிய முனிவர் சபித்தனர். பின்பு அம்முனிவரின் கட்டளைப்படி இலக்குமியும் திருமா லும் இத்தலத்தை வழிபட்டுச் சாபம் நீங்கப் பெற்றுப் பலவிதப் பேறுகளையடைந்தனர்.

5. தென்னளகையாய சருக்கம்:

அளகைவேந்தனுகிய குபேரன் சிவபூசையே சிறந்த பேற்றைத் தருவது என எண்ணிப் பல தலங்களையும் வழி பட்டுப் பாண்டிநாடணைந்தான். அங்குள்ள தலங்களையும் வழிபட்டு வருங்கால், வைகை நதியானது பெருக்கிட, வைகைக் கரையிலேயே தங்கி அங்குள்ள புளியமரத்தினடி யில் பூசை செய்யத் தொடங்கினன். அப்பொழுது திரு வருளால் ஆகாயத்தில் " அன்பனே, நீ இங்கு பூசை செய் யற்க. அதற்கு இது தக்க இடமன்று. வழிபட்டோருக்கு வெற்றியைத் தருதலால் **விசயபுரம்** எனப் பெயர் பெறும் கானப்பேருரை வந்து தரிசிப்பாயாக. **" கானைநாயகன் கருது சோமேசர் இருமையுமுதவ இலங்கும் மிங்கிவை போல் எவ்வுலகத்தினுமில்லை "** ஆகையால் அங்கு வந்து உன் பூசனையைச் செய்வாயாக " என்று திருவொலி எழுந் தது. அவ்வண்ணமே குபேரன் இத்தலத்தையடைந்து பல திருப்பணிகள் செய்து இத்தலத்தையும் புதிப்பித்து **தென்னளகாபுரி** எனப் பெயரிட்டு நற்பேறு பெற்ருன்.

6. நித்திருவன் புதல்வி சாபம் தீர்த்த சருக்கம்:

நித்திருவ மாமுனிவரது புதல்வி, தந்தையின் பூசை யின் பொருட்டு நந்தவனத்தில் தன் சேடிகளோடு பூக் கொய்துகொண்டிருக்கும்பொழுது வாயுதேவன் இப்பெண் ணின் அழகில் ஈடுபட்டு மானிடவுருவந்தாங்கித் தனது ஆசையை வெளிப்படுத்தினன். அவள் அதைத் தன் தந்தை யிடம் வந்து முறையிட்டாள். நித்திருவ முனிவர் கோப முற்று " இத்தகைய கொடியோனது தலை பொடியாக " எனச் சபித்தனர். அதற்குள் வாயுதேவனும் அவண் வந்து " மக்களில் உயர்ந்த தேவன் மணஞ் செய்து கொள்ளல் முறையே ஆகையால் உனது பெண்ணும் பேயுருவாகக் கடவள் " எனச் சபித்தான். வாயுவினது தலையும் சித றியது. அப்பெண்ணும் பேயுருவமாயினள்.

நித்திருவர் அகத்தியர் கூறியவண்ணம் தன் புதல் வியைக் கானப்பேருர் கூட்டிவந்து தீர்த்தத்தில் மூழ்கிச்

காளையெம்பெருமானை வழிபடப் பேயுருவம் நீங்கித் தேவ உருவம் பெற்றனள். அவ்வாறே வாயுவும் இத்தலத்தை வந்தடைந்து சாப விமோசனம் பெற்று அகத்திய முனிவரது ஆசியின்வண்ணம் நித்திருவனது புதல்வியை மணந்து மகிழ்வுடன் தன்னிருக்கை சென்றான். பின்பு நித்திருவரும் இங்கேயே பல காலம் தங்கி வழிபாடியற்றி முத்தியடைந்தனர். அதுமுதல் "**சாபவிமோசனத்தலம்**" என்னும் பெயரை இத்தலம் அடைந்தது.

7. இந்திரன் முதலோர் வழிபடு சருக்கம்:

இந்திரன் அகலிகைமீது மோகங் கொண்ட காரணத்தால் கௌதமரால் பெற்ற சாபம் இத்தலத்தில் நீங்கப் பெற்றது. இந்திரன் சிவகங்கையில் மூழ்கி ஆயிரத்தெட்டு சிவலிங்கம் அமைத்து வழிபட்டான். (ஆயிரத்தெட்டு சிவலிங்கம் இப்பொழுது சோமனாதராலயத்தில் எழுந்தருளச் செய்யப்பட்டிருக்கிறது)

இவ்வாறே வருணனும் இத்தலத்தையடைந்து பூசித்துச் சிவலிங்கப் பிரதிட்டை செய்து வழிபட்டான். (அவ்விலிங்கம் இப்பொழுது ஸ்ரீ சுவர்ண காளீசப் பெருமான் ஆலயத்தில் இரண்டாம் பிரகாரத்தில் எழுந்தருளச் செய்யப் பெற்றிருக்கிறது.)

இவ்வாறே திக்குப்பாலகரனைவரும் இத்தலத்தையடைந்து வழிபட்டுப் பேறு அடைந்தனர்.

8. வெள்ளானை சேடன் முதலோர் வழிபடு சருக்கம்

இத்தலத்தில் அயிராவதம், ஆதிசேடன் முதலானோர் வழிபட்டுப் பேறு அடைந்தனர். இறைவன் அவர்களுக்கு வரமளித்தவண்ணம் இத்தலமானது, கிருதயுகத்தில் **இடபபுரி** எனவும், திரேதாயுகத்தில் **சேடபுரி** எனவும், துவாபரயுகத்தில் **ஞானபுரி** எனவும், கலியுகத்தில் **அயிராவதபுரி** எனவும் பெயர் வழங்கலாயிற்று.

9. இராமர் முதலானோர் இராச்சியமாதி பெற்ற சருக்கம்:

ஸ்ரீ ராமபிரான் காளைநாயகரை வழிபட்டு அரக்கரை யழிக்கும் வலிபெற்று இராவணனை சம்கரித்து சிதையுடன் இலங்கைசென்று இராச்சிய பாரம் பெற்றனர்.

பாண்டவர்கள் இத்தலத்தை வழிபட்டுக் காளைநாயகர் திருவருளால் துரியோதனாதியரை வென்று இராச்சிய பாரத்தைப் பெற்றனர்.

கருடன் இத்தலத்தை வழிபட்டுத் தன் தாயினது துன்பத்தை நீக்கினான்.

10. தீர்த்தச் சருக்கம்:

இராமபிரான் இத்தலத்திலுள்ள யானைமடு தீர்த்தத்துள் மூழ்கி இராவணனைக் கொன்ற பிரமகத்தி நீங்கப் பெற்றார்.

11. வேதகன் சருக்கம்:

வேதகன் என்னும் அந்தணன், தான் செய்த குருத் துரோகத்தாலும், சிரார்த்த வழுவினாலும் பேயுருவத்தைப் பெற்றான். அவ்வுருவத்தோடு வனங்களில் சுற்றி அலைந்து கொண்டிருந்தான்.

12. சிங்களத்தரசன் சாபந் தீர்ந்த சருக்கம்:

பேயுருவத்தோடு அலைந்த வேதகன் காத்தியாயன முனிவரின் ஆச்சிரமத்தருகே அலைந்துகொண்டிருந்தான். அதனைக் கண்ட காத்தியாயன முனிவர், "முன்னொரு காலத்தில் சிங்களத்தையாண்ட அரசனது பிரமகத்தி தோடம் நீங்கப்பெற்ற தலமாகிய கானப்பேரூரையடைவாயாக" என்று கூறினார்.

13. வேதகன் பேயுருவம் நீங்கப் பெற்ற சருக்கம்:

காத்தியாயன முனிவர் கூறியவண்ணம் வேதகன் இத்தலத்தையடைந்து யானைமடுத் தீர்த்தத்தில் மூழ்கிப் பேயுருவம் நீங்கப் பெற்ருன்.

14. நிதாகனுக்கு அகத்தியர் நெறி உரைத்த சருக்கம்

காம்பீலி நாட்டையாண்ட நிதாகன் என்னும் அரசன் மனுமுறை கோணுது அரசியல் நடாத்தி வந்தான். அவ் வமயம் அகத்திய முனிவர் அங்கு எழுந்தருளி அவனுக்கு முத்தி நெறியின் சிறப்பை எடுத்துக்கூறி அதனை எளி தாகப் பாண்டிநாட்டின்கண்ணே திருக்கானப்பேரூரில் வீற்றிருக்கும் காளைநாயகரையும், சோமநாதரையும் வழி படலால் பெறலாம் எனக் கூறியருளினுர்.

15. சோமநாதர் அப்பேறடைந்த சருக்கம்:

அதனைக் கேட்டு மகிழ்ந்த நிதானன் கானப்பேரி லுள்ள இறைவனுக்கு "சோமநாதர்" எனப் பெயர் வரக் காரணம் கூறியருள வேண்டினன். அகத்திய முனிவர் மகிழ்ந்து "சந்திரன், ரோகிணிபால் மிகுந்த காதல் கொண்டதனுல் ஏற்பட்ட சாபத்தைப் போக்கிக் கொள்ள இத்தலத்தையடைந்து வழிபட்டான். அவனுக்கு அருள் புரிந்த காரணத்தால் இறைவன் **சோமனுதன்** எனப் பெயர் பெற்றனர்" என்று கூறியருளினுர். அதனைக்கேட்டு மகிழ்ந்த நிதானன் தனது சேனை பரிவாரங்களுடன் வந்து கானப்பேரூரையடைந்து வழிபட்டு மகிழ்ந்திருந்தான்.

16. பூபதி திருப்பணி திருவிழாச் செய்த சருக்கம்:

நிதானன் இவ்வாறு அங்கிருந்து காளைநாயகருக்கும், சோமநாதருக்கும் பல திருப்பணிகள் செய்து விழாப் பல நடாத்தி இறைவனதாலயத்தைச் சதாகாலமும் வலம் வருவதும் தியானிப்பதுமாக இருந்தான். ஒரு வைகாசிப்

பூரணையில் இறைவன் அவன் முன்பு எழுந்தருளி முத்தி இன்பத்தைத் தந்து பேரானந்தப் பெருவாழ்வை அடையச் செய்தான்.

ஆரிய மளந்து தூய தமிழ்த்துறை யனைத்தும் தேர்ந்து
பேரியல் அகோர தேவன் பிறங்கிய மதுரத் தீந்தேன்
சீரியல் சந்த வின்பச் செழுந்தொடைத் தமிழாற் செய்தான்
நாரிதன் பங்கன் காளை நாயகன் நயக்கு மாறே



இத்தலத்தைப் பற்றிய பிற செய்திகள்

சங்க காலம் :-

கி. பி. 2-ஆம் நூற்றுண்டுக்கு முன்னர் இராமனுத புரம் மாவட்டத்தில் பெரும்பாகம், புதுக்கோட்டைப் பகுதி யின் தென்பாகம் இரண்டும் சேர்ந்து **கான நாடு** எனச் சங்க காலத்து விளங்கியது. இக்கானல் நாட்டுக்குத் தலைநகராக விளங்கியது நம் காளையார் கோவிலேயாகும். இந்நாட்டினை மார்பகலத்திலும் மனஉறுதியிலும் வீரத் திலும் சிறந்த வேங்கைமார்பன் என்னும் அரசன் ஆண்டு வந்தனன். இக்கானல் நாட்டினுடைய காவற்படை இருந்த இடமே **கானல் நாடு காத்தான்** என்பது. இப்பொழுது கானுடுகாத்தான் என வழங்குகிறது.

காளையார்கோவிலைச் சுற்றிச் சிறந்த மதிலரண், அகழரண், காட்டரண், படையரண் பொருந்திய ஓர் பேரரண் அமைந்திருந்தது. அதனுல் வேங்கைமார்பன் யாரையும் மதியாது தவருன வழியில் ஆட்சி செய்யத் தொடங்கினுன்.

அப்பொழுது பாண்டி நாட்டை ஆண்டு வந்தவன் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி எனப்படுவான். பழமை யான பாண்டி வேந்தர்களுள் இவனும் ஒருவன். இவனது சபையிலேயே திருக்குறள் அரங்கேற்றப்பட்டதென்று கூறு வார்கள். அகநானூற்றைத் தொகுத்தோனும் இவனெனக் கூறுவாருமுண்டு. இவன் பேரரசன் என்ற முறையில் கானல் நாட்டையாண்ட வேங்கைமார்பனுக்குப் பலமுறை அறிவுரை கூறியும் அவன் தவருன வழியிலேயே நடந்து கொண்டிருந்தமையால் கோபங்கொண்டு கானப்பேரூரில்

விளங்கிய அரணை அழிக்காமலே தனது வீரத்தினால் கைப்பற்றிக் காளையார்கோவிலையும் தன்னகப்படுத்தினான்.

கானப்பேருரிலுள்ள எயிலைக் கைக்கொண்டமையால் கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி எனப்பெயர் பெற்றான். இவன் வென்ற கானப்பேரெயிலின் சிறப்பை, ஐயூர் மூலங்கிழார் பின்வருமாறு கூறுகிறார் :

" நிலவரை இறந்த குண்டுகண்அகழி
வான்தோய்வு அன்ன புரிசை விசும்பின்
மீன்பூத் தன்ன உருவ ஞாயிற்று
கதிர் நுழை கல்லா மரம்பயில் கடிமிளை
அருங்குறும் புடுத்த ***கானப் பேரெயில்***
(புறம் 21)

சோழர் காலம் :-

பத்து, பதினொன்று, பன்னிரண்டாம் நூற்றாண்டு களில் இராசராசன், இராஜேந்திரன் என்ற சோழர்கள் பெருஞ் சிறப்புற்று விளங்கினார்கள். இராசராசன், தான் கட்டிய தஞ்சைப் பெருவுடையார் கோவிலுக்கு சிகாரியக் கண்காணி நாயகமாகக் கானப்பேர்க் கூற்றத்திலிருந்த மாலரிகோசன் என்பாரை நியமித்தான்.

இக்காலத்து பாண்டியர்கள் சோழருக்கு உட்பட்டே நடக்க நேர்ந்தது. அங்ஙனம் பாண்டியர் வளங்குன்றிக் கிடந்த காலையில் (கி. பி. 1170) பாண்டி நாட்டில் அரசுக் காகப் போர் மூளுகிறது. பராக்கிரம பாண்டியனுக்கு எதிராகக் குலசேகர பாண்டியன் கிளம்புகிறான். முன்னவர் களுக்கு இலங்கை வேந்தன் துணை செய்கின்றான். பின்ன வனுக்குச் சோழர் பக்கபலமாகின்றனர்.

இலங்கை வீரர் பாண்டிநாட்டில் புகுந்து துன்பம் விளைவிக்கின்றனர். பற்பல நகரங்கள் இவர்களுக்கு அடிப் படுகின்றன. இலங்கைத் தளவாய், இலங்காபுரத்தண்ட

நாதன், ஜகத் விஜயன் இருவரும் கானப்பேர் வரையில் வந்து அதனை வசம் செய்கின்றனர். அந்த இடமே அவர்களது மூலக்கொத்தளமாக அமைகிறது. பொன்னமராவதி, புதுக்கோட்டை, மானுமதுரை, மதுரை முதலிய இடங்கள் அவர்களுக்கு அடிபணிகின்றன, இதற்குள் பராக்கிரம பாண்டியன் பரலோகம் போய்விடுகிறுன். உடனே வீர பாண்டியனுக்கு முடிகவித்து இலங்கைத் தளவாய் வெற்றியுடன் திரும்புகிறுன். திரும்புகையில் அப்பொழுது கானப்பேரே தாரகமான இடமாயிருந்தது.

முகமதியர் காலம் :- (கி. பி. பதினுன்காம் நூற்ருண்டு)

டில்லி சுல்தாளுக விளங்கிய கில்ஜி அனுப்பிய மலிக்காபூர் சீரங்கத்தின்மீது படையெடுத்துக் கோவிலைச் சிதைக்கத் தொடங்க, கருப்பக் கிரகத்தை நான்கு பக்கமும் சுவர் எழுப்பி மறைத்து, இரங்கனுத விக்கிரகத்தையும், நாச்சியாரையும் தூக்கிக்கொண்டு, பிள்ளை லோகாசாரியார் சோதி மரங்கள் நிறைந்த காட்டரணையுடைய காளையார் கோவிலுக்கு வந்து அவ்விக்கிரகங்களை முகமதியரிடத்திலிருந்து காப்பாற்றினுர். யானை மடு தீர்த்தத்திற்கு மேற்புறத்திலே ஒரு கோவிலை யமைத்து அங்கு பெருமாளை (மூலவரை) பிரதிட்டித்து அக்கோவிலிலேயே ஸ்ரீரங்கத்து விக்கிரக மூர்த்தியை வைத்துக் காப்பாற்றிப் பின்பு திருப்பதியை அடைந்தார் (இப்பெரியார் பிரதிட்டை செய்த பெருமாள் இப்பொழுது ஸ்ரீ சோமேசராலயத்தில் எழுந்தருளியுள்ளார்). பின்பு விஜய நகர தளகர்த்தனுன கோபன்ன என்னும் வேதியர், ஸ்ரீரங்கத்தில் இருந்த முகமதியரை வென்று ஸ்ரீரங்கநாதரையும் நாச்சியாரையும் அங்குக் கொண்டுபோனுர்.

கி. பி. 16-ஆம் நூற்ருண்டு :-

அப்பொழுது பாண்டி நாட்டை யரசாண்ட அரசனுடைய காதலியாகிய காளையார் கோவிலில் இருந்த தாசி அபிராமி வயிற்றுப் பிள்ளை, சுந்தரத்தோள் மாவலி வாணதிராயர் என்பவனை லக்கண நாயக்கர் என்பவர்

கொண்டு வந்து மதுரைக்கு அரசனுக்கியதாக "செந்தமிழ்" நான்காம் தொகுதியில் வெளிவந்த "மதுரை வரலாறு" என்னும் பழைய ஏடு கூறுகிறது. இக்காலத்தில்தான் பொய்யாமொழிப் புலவர் இத்தலத்திற்கு வந்து இறைவனை வழிபட்டு இத்தலத்திலுள்ள உருத்திர கணிகையர்களால் ஆயிரம் பொன் பரிசு பெற்றுர்.

கி. பி. 18-ஆம் நூற்றுண்டு:-

கம்பெனியார் காலத்தில் பாண்டி நாட்டுப் பாளையப் பட்டுகளின் கலகம் பிரமாதமாக நடைபெற்றது. கம்பெனி யாருக்கும் துருப்புகளுக்கும் ஆர்க்காட்டு நவாப்புக்களின் வீரர்களுக்கும் துன்பம் உண்டாகிப் பாளையப்பட்டுக்களின் கையில் சிக்கிச் சிரழிந்தனர். அப்பொழுது சின்னமருது என்ற சிறந்த வீரன் காளையார் கோவிலைக் கைக்கொண் டான்.

பெரியமருது, சின்னமருது:-

இவ்விரு மன்னர்களும் காளையார் கோவிலில் மூன்று சந்நிதிகள் கொண்ட திருக்கோவிலைக் கட்டினர். சோம நாதரது பெரியகோபுரம் இவர்களாலேயே கட்டப்பெற்றது. திருவாரூர் தேருக்கு அடுத்தபடி பெரிதாக மதிக்கப்படும் தேர் ஒன்றையும் செய்து தந்தனர். ஆனைமடு என்னும் அழகான நீராழியையும் புதுப்பித்தார்களாம். இக்கோவில் திருப்பணிக்குப் பலகல் தொலைவில் உள்ள மானுமதுரையி லிருந்து கைவழியாகவே செங்கல் வந்தன என்று அறிஞர் கூறுகிருர்கள். அங்ஙனமாயின் இவர்கட்கு இருந்த ஆள் கட்டையும், மக்கள் இவர்கள்பால் கொண்டிருந்த மாரு அன்பையும் என்னென்று கூறுவது! கம்பெனியார் காளை யார்கோவிலை நோக்கிப் படையெடுத்த பொழுது, சிறுவய லிலிருந்து காளையார்கோவிலுக்கு வரும் வழியில் ஒரேநாள் இரவில் பெரிய உயரிய மணல்அரணை, மருதுபாண்டியரின் வீரர்கள் அமைத்துவிட்டார்கள். (இவ்வரணே இப்பொ ழுது பாண்டியன் கோட்டை என வழங்கப்படுகிறது) ஆயி னும் ஆங்கிலேயர் மிகவும் சிரமப்பட்டு சிலரது மோசத்

தனத்தால் காளையார்கோவிலையடைந்து அந்நகரையே அக்டோபர் 11-ஆம் தேதி தீயிலிட்டுக் கொளுத்தினர். அன்று முதல் காளையார்கோவில் சிற்றூராயது. (பழைய அரண்மனை இருந்தஇடம் அரண்மனைமேடு என வழங்கப்படுகிறது. அதுபோன்ற அழிவுகள் பலவற்றை இப்பொழுதுங் காணலாம்.) மருதுபாண்டியர் இறக்குந்தருவாயில் வேண்டிக் கொண்டபடி காளைநாயகருக்கு எதிரே அவர் சமாதி கட்டப்பட்டுள்ளது. அவ்விரு சகோதரர்களின் திருவுருவம் காளைநாயகருக்கு எதிரே அமைக்கப்பட்டுள்ளது.

கர்னல் ஜேம்ஸ் வெல்ஷ்:-

கம்பெனியார் படைத்தலைவராக விளங்கிய இவ்வாங்கிலேயர் மருதுபாண்டியர் காலத்துக் காளையார்கோவில் இவ்வாறு இருந்தது என்று எழுதுகிறார்!

காளையார்கோவிலைச் சுற்றியிருந்த கோட்டைச் சுவர்கள் மிகப் பெரியனவாகவும், உறுதிபடைத்தனவாகவும் விளங்கின. ஊருக்குள் எங்கும் எழிலும் ஏற்றமும் நிறைந்த மாளிகைகள் காணப்பட்டன. இத்தகைய பெருநகரைப் பிடிக்க ஆறு நாட்கள் கடும்போர் செய்தோம். என்று "எனது ராணுவ நினைவுகள்" என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

பிற்காலம்:-

பின்பு நெடுங்காலம் ஊர் மிகவும் கேடுற்றே இருந்தது. நாட்டுக்கோட்டை நகரப் பெருமக்களால் சிறிது காலத்துக்குமுன் சிறிது சீர்திருத்தப்பட்டு ஆலயப் பணிகளும் செய்யப்பட்டன, செய்யப்படுகின்றன, செய்யப்படும்.

தளவாய் சேதுபதியவர்கள் காளைநாயகர்பால் பெரிதும் ஈடுபட்டுப் பாடல்களும் பாடியுள்ளார் என்பது, "காளையினீசர் பதம் போற்றி" என வரும் துளசிங்க மாலையால் அறியாலம்,

இராமனுதபுரம் சமஸ்தானத்தைச் சேர்ந்த சேதிராய ரென்னும் மந்திரி திருக்கானப்பேரூரில் திருப்பணிகள் செய்திருக்கிறுன் என்பது,

"நட்டூரிற் சோமேசர் கோவிறல
மானதனை நகத்தாற் செய்து
... ... ஞானச் சேதிராயன்"

எனவரும் தனிப்பாடலால் அறியலாம்.

காளைநாயகர் கழலடி வாழ்க

காளைநாயகர் புராண வசனச் சுருக்கம் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்

சிவமயம்

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

திருமுறை

முதல் திருமுறை

பண் - மேகராகக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

கங்காளர் கயிலாய மலையாளர்
கானப்பே ராளர் மங்கை
பங்காளர் திரிசூலப் படையாளர்
விடையாளர் பயிலுங்கோயில்
கொங்காளப் பொழினுழைந்து கூர்வாயா
லிறகுலர்த்திக் கூத னீங்கிச்
செங்கானல் வெண்குருகு பைங்கான
லிரைதேருந் திருவையாறே

இரண்டாந் திருமுறை

பண் - இந்தளம்

ஆரூர் தில்லையம் பலம்வல் லம்நல்லம்
வடகச் சியுமகச் சிறுபாக்கம் நல்ல
கூரூர் குடவாயில் குடந்தை வெண்ணி
கடல்சூழ் கழிப்பாலை தென்கோடி பீடார்

நீரூர் வயல்நின்றி யூர்குன்றி யூருங்குரு
காவையூர் நாரையூர் நீடு கானப்
பேரூர் நன்னீள் வயல்நெய்த் தானமும்
பிதற்றாய் பிறை சூடிதன் பேரிடமே

மூன்றாந் திருமுறை

பண் - கொல்லி

பிடியெலாம் பின்செலப் பெருங்கைமா மலர்தழீஇ
விடியலே தடமூழ்கி விதியினால் வழிபடும்
கடியுலாம் பூம்பொழில் கானப்பேர் அண்ணல்நின்
அடியலால் அடைசரண் உடையாரோ அடியரே.

நுண்ணிடைப் பேரல்குல் நூபுரம் மெல்லடிப்
பெண்ணின்நல் லாளையோர் பாகமாப் பேணினான்
கண்ணுடை நெற்றியான் கருதிய கானப்பேர்
விண்ணிடை வேட்கையார் விரும்புதல் கருமமே.

வாவிவாய்த் தங்கிய நுண்சிறை வண்டினம்
காவிவாய்ப் பண்செயுங் கானப்பேர் அண்ணலை
நாவிவாய்ச் சாந்துளும் பூவுளும் ஞானநீர்
தூவிவாய்ப் பெய்துநின் றூட்டுவார் தொண்டரே.

நிறையுடை நெஞ்சுளும் நீருளும் பூவுளும்
பறையுடை முழவுளும் பலியுளும் பாட்டுளும்
கறையுடை மிடற்றண்ணல் கருதிய கானப்பேர்
குறையுடை யவர்க்கலாற் களைகிலார் குற்றமே.

ஏனப்பூண் மார்பின்மேல் என்புபூண் டீறிலா
ஞானப்பே ராயிரம் பேரினான் நண்ணிய
கானப்பே ரூர்தொழும் காதலார் தீதிலர்
வானப்பே ரூர்புகும் வண்ணமும் வல்லரே.

பள்ளமே படர்சடைப் பாற்படப் பாய்ந்தநீர்
வெள்ளமே தாங்கினன் வெண்மதி சூடினன்
கள்ளமே செய்கிலார் கருதிய கானப்பேர்
உள்ளமே கோயிலா உள்குமென் உள்ளமே.

மானமா மடப்பிடி வன்கையால் அலகிடக்
கானமார் கடகரி வழிபடுங் கானப்பேர்
ஊனமாம் உடம்பினில் உறுபிணி கெடஎண்ணில்
ஞானமா மலர்கொடு நணுகுதல் நன்மையே.

வாளினன் வேலினன் மால்வரை யெடுத்ததிண்
தோளினன் நெடுமுடி தொலையவே யூன்றிய
தாளினன் கானப்பேர் தலையினல் வணங்குவார்
நாளும்நாள் உயர்வதோர் நன்மையைப் பெறுவரே.

சிலையினல் முப்புரம் தீயெழச் செற்றவன்
நிலையிலா இருவரை நிலைமைகண் டோங்கினன்
கலையினர் புறவில்தேன் கமழ்தரு கானப்பேர்
தலையினல் வணங்குவார் தவமுடை யார்களே.

உறித்தலைச் சுரையொடு குண்டிகை பிடித்துச்சி
பறித்தலும் போர்த்தலும் பயனிலை பாவிகாள்
மறித்தலை மடப்பிடி வளரிளங் கொழுங்கொடி
கறித்தெழு கானப்பேர் கைதொழல் கருமமே.

காட்டகத் தாடலான் கருதிய கானப்பேர்
கோட்டகத் திளவரால் குதிகொளுங் காழியான்
நாட்டகத் தோங்குசீர் ஞானசம் பந்தன
பாட்டகத் திவைவலார்க் கில்லையாம் பாவமே.

எக்கராம்அமண் கையருக்கெளி யேனலேன்திரு ஆலவாய்ச்
சொக்கனென்னுள் இருக்கவேதுளங் கும்முடித்தென்னன் முன்னிவை
தக்கசீர்ப்புக லிக்குமன்தமிழ் நாதன்ஞானசம் பந்தன்வாய்
ஒக்கவேயுரை செய்தபத்தும் உரைப்பவர்க்கிடர் இல்லையே.

தக்கன் வேள்வி தகர்த்தருள் ஆலவாய்ச்
சொக்க னேயஞ்ச லென்றருள் செய்யெனை
எக்க ராம்அம் ணர்கொளு வுஞ்சுடர்
பக்க மேசென்று பாண்டியற் காகவே.

திருநாவுக்கரசு சுவாமிகள்

நான்காந் திருமுறை

பண் - பழம்பஞ்சுரம்

ஆனைக் காவில் அணங்கினை ஆரூர் நிலாய அம்மானைக்
கானப் பேரூர்க் கட்டியைக் கானூர் முளைத்த கரும்பினை
வானப் பேரார் வந்தேத்தும் வாய்மூர் வாழும் வலம்புரியை
மானக் கயிலை மழகளிற்றை மதியைச் சுடரை மறவேனே.

திருநேரிசை

ஊனப்பே ரொழிய வைத்தார் ஓதியே உணர வைத்தார்
ஞானப்பேர் நவில வைத்தார் ஞானமும் நடுவும் வைத்தார்
வானப்பேர் ஆறு வைத்தார் வைகுந்தற் காழி வைத்தார்
கானப்பேர் காதல் வைத்தார் கழிப்பாலைச் சேர்ப்ப னாரே.

ஆறாந் திருமுறை

திருத்தாண்டகம்

சிறையார் புனற்கெடில வீரட்டமும்
திருப்பா திரிப்புலியூர் திருவாமாத்தூர்
துறையார் வனமுனிகள் ஏத்தநின்ற
சோற்றுத் துறைதுருத்தி நெய்த்தானமும்

அறையார் புனலொழுகு காவிரிசூழ்
ஐயாற் றமுதன் பழனம்நல்ல
கறையார் பொழில்புடைசூழ் கானப்பேரும்
கழுக்குன்றும் தம்முடைய காப்புக்களே.

தேனப்பூ வண்டுண்ட கொன்றையான் காண்
திருவேகம் பத்தான்காண் தேனார்ந்துக்க
ஞானப்பூங் கோதையாள் பாகத்தான்காண்
நம்பன்காண் ஞானத் தொளியா னன்காண்
வானப்பே ரூரும் அறிய வோடி
மட்டித்து நின்றான்காண் வண்டார் சோலைக்
கானப்பே ரூரான்காண் கறைக்கண் டன்காண்
காளத்தி யானவனென் கண்ணுளானே.

கடமன்னு களியானை யுரிவை போர்த்தார்
கானப்பேர் காதலார் காதல்செய்து
மடமன்னு மடியார்தம் மனத்தி னுள்ளார்
மானுரித்தோன் மிசைத்தோளார் மங்கை காண
நடமன்னி யாடுவார் நாகம் பூண்டார்
நான்மறையோ டாறங்கம் நவின்ற நாவார்
படமன்னு திருமுடியார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணைநல் லூராரே.

மறைக்காட்டார் வலிவத்தார் வாய்மூர் மேயார்
வாள்கொளிபுத் தூரார்மா காளத்தார்
கறைக்காட்டுங் கண்டனார் காபா லியார்
கற்குடியார் விற்குடியார் கானப்பேரார்
பறைக்காட்டுங் குழிவிழிகட் பல்பேய் சூழப்
பழையனூ ராலங்காட் டடிகள் பண்டோர்
மிறைக்காட்டுங் கொடுங்காலன் வீடப் பாய்ந்தார்
வீழி மிழலையே மேவி னாரே.

ஆரூர்மூ லட்டானம் ஆனைக் காவும்
ஆக்கூரில் தான்தோன்றி மாட மாவூர்

பேரூர்பி ரமபுரம் பேரா வூரும்
பெருந்துறை காம்பிலி பிடவூர் பேணும்
கூரார்கு றுக்கை வீரட்டா னமுங்
கோட்டூர் குடமூக்குக் கோழம் பமும்
காரார்க ழுக்குன் றும் கானப் பேருங்
கயிலாய நாதனையே காண லாமே.

தேவார்ந்த தேவனைத் தேவ ரெல்லாந்
திருவடிமேல் அலரிட்டுத் தேடி நின் று
நாவார்ந்த மறைபாடி நட்ட மாடி
நான்முகனும் இந்திர னும் மா லும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப் பேராய்
கழுக்குன் றத் துச்சியாய் கடவுளே நின்
பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

ஏழாந் திருமுறை

பண் - இந்தளம்

தென்னூர் கைம்மைத் திருச்சுழி யற்திருக் கானப்பேர்
பன்னூர் புக்குறை யும்பர மர்க்கிடம் பாய்நலம்
என்னு ரெங்கள் பிரானுறை யுந்திருத் தேவனூர்
பொன்னூர் நாட்டுப்பொன் னூர்புரி சைநாட்டுப் புரிசையே.

பண் - பழம்பஞ்சுரம்

காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே கானப் பேரூராய்
கோட்டூர்க் கொழுந்தே யழுந்து ரரசே கொழுநற் கொல்லேறே
பாட்டூர் பலரும் பரவப் படுவாய் பனங்காட் டூரானே
மாட்டூ ரறவா மறவா துன்னைப் பாடப் பணியாயே.

பண் - புறநீர்மை

தொண்ட ரடித்தொழலுஞ் சோதி யிளம்பிறையுஞ்
சூதன மென்முலையாள் பாகமு மாகிவரும்
புண்டரிகப் பரிசாம் மேனியும் வானவர்கள்
பூச விடக்கடல்நஞ் சுண்ட கருத்தமரும்
கொண்ட லெனத்திகழும் கண்டமு மெண்டோளும்
கோல நறுஞ்சடைமேல் வண்ணமுங் கண்குளிரக்
கண்டு தொழப்பெறுவ தென்றுகொ லோவடியேன்
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே.

கூத விடுஞ்சடையுங் கோளரவும் விரவுங்
கொக்கிற குங்குளிர்மா மத்தமு மொத்துனதாள்
ஓத லுணர்ந்தடியார் உன்பெரு மைக்குநினைந்
துள்ளுரு காவிரசும் ஓசையைப் பாடலும் நீ
ஆத லுணர்ந்தவரோ டன்பு பெருத்தடியேன்
அங்கையின் மாமலர்கொண் டென்கண தல்லல்கெடக்
காத லுறத்தொழுவ தென்றுகொ லோவடியேன்
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே.

நானுடைய மாடெனவே நன்மை தரும்பரனை
நற்பத மென்றுணர்வார் சொற்பத மார்சிவனைத்
தேனிடை யின்னமுதை மற்ற தனிற்றெளியைத்
தேவர்கள் நாயகனைப் பூவுயர் சென்னியனை
வானிடை மாமதியை மாசறு சோதியனை
மாருத மும்மனலும் மண்டல மும்மாய
கானிடை மாநடனென் றெய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே.

செற்றவர் முப்புரமன் றட்டசிலைத் தொழிலார்
சேவக முந்நினைவார் பாவகமுந் நெறியும்
குற்றமில் தன்னடியார் கூறுமிசைப் பரிசுங்
கோசிக மும்மரையிற் கோவண மும்மதளும்

மற்றிகழ் திண்புயமும், மார்பிடை நீறுதுதை
மாமலை மங்கையுமை சேர்சுவ டும்புகழக்
கற்றன வும்பரவிக் கைதொழ லென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே.

கொல்லை விடைக்கழுகுங் கோல நறுஞ்சடையிற்
கொத்தல ரும்மிதழித் தொத்து மதனருகே
முல்லை படைத்தநகை மெல்லிய லாளொருபால்
மோக டிகுத்திலங்கும் கூறுசெய் எப்பரிசும்
தில்லை நகர்ப்பொதுவுற் றாடிய சீர்நடமுந்
திண்மழு வுங்கைமிசைக் கூரெரியும் மடியார்
கல்ல வடப்பரிசுங் காணுவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே.

பண்ணு தலைப்பயனுர் பாடலு நீடுதலும்
பங்கய மாதனையார் பத்தியு முத்தியளித்
தெண்ணு தலைப்பெருமா னென்றெழு வாரவர்தம்
ஏசற வும்இறையா மெந்தையை யும்விரவி
நண்ணு தலைப்படுமா றெங்ஙன மென்றயலே
நைகிற என்னைமதித் துய்யும் வணம்அருளும்
கண்ணு தலைக்கனியைக் காண்பது மென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே.

தொண்டர் தமக்கெளிய சோதியை வேதியனைத்
தூய மறைப்பொருளா நீதியை வார்கடனஞ்
சுண்ட தனுக்கிறவா தென்று மிருந்தவனை
யூழி படைத்தவனோ டொள்ளரி யும்முணரா
அண்டனை யண்டர்தமக் காகம நூன்மொழியு
மாதியை மேதகுசீ ரோதியை வானவர்தம்
கண்டனை யன்பொடுசென் றெய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே.

நாதனை நாதமிகுத் தோசைய தானவனை
ஞான விளக்கொளியா மூனுயி ரைப்பயிரை

மாதனை மேதகுதன் பத்தர் மனத்திறையும்
பற்று விடாதவனைக் குற்றமில் கொள்கையனைத்
தூதனை யென்றனையாள் தோழனை நாயகனைத்
தாழ்மக ரக்குழையும் தோடு மணிந்ததிருக்
காதனை நாயடியே னெய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே.

கன்னலை யின்னமுதைக் கார்வயல் சூழ்கானப்
பேருறை காளையையொண் சீருறை தண்டமிழால்
உன்னி மனத்தயரா வுள்ளுரு கிப்பரவும்
ஒண்பொழில் நாவலர்கோ னாகிய ஆரூரன்
பன்னு மிசைக்கிளவி பத்திவை பாடவல்லார்
பத்தர் குணத்தினரா யெத்திசை யும்புகழ
மன்னி யிருப்பவர்கள் வானி னிழிந்திடினும்
மண்டல நாயகராய் வாழ்வது நிச்சயமே.

கல்லாடதேவ நாயனார் அருளிச் செய்த
திருக்கண்ணப்பதேவர் திருமறம்
பதினோராந்திருமுறை

பரிவின் றன்மை யுருவுகொண் டனையவன்
போழ்வார் போர்த்த தாழுகச் செருப்பினன்
குருதி புலராச் சுரிகை யெஃகம்
அரையிற் கட்டிய வுடைத்தோற் கச்சையன்
தோல்நெடும் பையில் குறுமயிர் திணித்து
வாரில் வீக்கிய வரிக்கை கட்டியன்
உழுவைக் கூனுகிர் கேழல்வெண் மருப்பு
மாறுபடத் தொடுத்த மாலை யுத்தரியன்
நீலப் பீலி நெற்றி சூழ்ந்த
கானக் குஞ்சிக் கவடி புல்லினன்
முடுகு நாறும் குடிலை யாக்கையன்
வேங்கை வென்று வாகை சூடிய
சங்கரன் தன்னினத் தலைவ னேங்கிய

வில்லும் அம்பும் நல்லன தாங்கி
யேற்றுக் கல்வனங் காற்றினி லியங்கிக்
கணையில் வீழ்த்துக் கருமா வறுத்துக்
கோலி னேற்றிக் கொழுந்திக் காய்ச்சி
நாவில் வைத்த நாட்போ னகமும்
தன்றலைச் சொருகிய தண்பளித் தாமமும்
வாய்க்கல சத்து மஞ்சன நீருங்
கொண்டு கானப் பேருறை கண்ணுதல்
முடியிற் பூசை யடியா னீக்கி
நீங்காக் குணத்துக்
கோசரிக் கன்றவ னேசங் காட்ட
முக்கண் அப்பனுக் கொருகணி லுதிரம்
தக்கி ணத்திடை யிழிதர வக்கணம்
அழுது விழுந்து தொழுதெழுந் தரற்றிப்
புன்மருந் தாற்றப் போகா தென்று
தன்னை மருந்தென்று மலர்க்கண் அப்ப
ஒழிந்தது மற்றை யொண்டிரு நயனம்
பொழிந்த கண்ணீர்க் கலுழி பொங்க
அற்ற தென்று மற்றக் கண்ணையும்
பகழித் தலையால் அகழ வாண்டகை
யொருகை யாலும் இருகை பிடித்து
வொல்லை நம்புண் ணொழிந்தது பாராய்
நல்லை நல்லை யெனப்பெறுந்
திருவேட் டுவர்தந் திருவடி கைதொழக்
கருவேட் டுழல்வினைக் காரியம் கெடுமே.

கபிலதேவ நாயனுர் அருளிச்செய்த சிவபெருமான் திருவந்தாதி

மூலைநலஞ்சேர் கானப்பேர் முக்கண னென்னு
மூலைநலஞ்சேர் மொய்சடையா னென்னு — மூலைநலஞ்சேர்
மாதேவா வென்று வளர்கொன்றை வாய்சோர
மாதேவா சோரல் வளை.

பரணதேவ நாயனுர் அருளிச்செய்த
சிவபெருமான் திருவந்தாதி

நிலேத்திவ் வுலகனைத்து நீரேயாய் நின்றீர்
நிலேத்திவ் வுலகனைத்து நீரே — நிலேத்திரக்
கானப்பே ரீர்கங்கை சூடினீர் கங்காளீர்
கானப்பே ரீர்கங்கை யீர்.

திருநாவுக்கரசு நாயனுர் புராணம்
பன்னிரண்டாந் திருமுறை

அங்குறைந்து கண்ணுதலா ரடிசூடி யகன்றுபோய்ப்
பொங்குதமிழ்த் திருநாட்டுப் புறம்பணேசூழ் நெல்வேலி
செங்கண்விடை யார்மன்னுந் திருக்கானப் பேர்முதலா
வெங்குநிகழ் தானங்க ளெல்லாம்புக் கிறைஞ்சுவார்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் புராணம்

பற்ருர்தம் புரங்கண்மலேச் சிலேயாற் செற்ற
பரமனுர் திருப்புத்தூர் பணிந்து போந்து
புற்ருரும் பணிபூண்ட புனிதனுர்தம்
பூவணத்தைப் புக்கிறைஞ்சிப் புகழ்ந்து பாடிக்
கற்ருர்கள் தொழுதேத்துங் கானப் பேருங்
கைதொழுது தமிழ்பாடிச் சுழியல் போற்றிக்
குற்ருலங் குறும்பலாக் கும்பிட் டேத்திக்
கூற்று தைத்தார் நெல்வேலி குறுகினுரே.

சேரமான் பெருமானுயனுர் புராணம்

அங்கணரைப் பணிந்துறையு மாரூரர்க் கவ்வூரிற்
கங்குலிடைக் கனவின்கட் காளேயாந் திருவடிவாற்
செங்கையினிற் பொற்செண்டுந் திருமுடியிற் சுழியமுட
னெங்குமிலாத் திருவேட மென்புருக் முன்காட்டி

கானப்பேர் யாமிருப்ப தெனக்கழறிக் கங்கையெனும்
வானப்பே ராறுலவு மாமுடியார் தாமகல
ஞானப்பே ராளருணர்ந் ததிசயித்து நாகமுட
னேனப்பே ரெயிறணிந்தா ரருளிருந்த பரிசென்பார்.

கண்டருளும் படிகழறிற் றறிவார்க்கு மொழிந்தருளிப்
புண்டரிகப் புனற்சுழியற் புனிதர்கழல் வணங்கிப்போய்
அண்டர்பிரான் திருக்கானப் பேரணைவார் ஆரூரர்
தொண்டரடித் தொழலுமெனுஞ் சொற்பதிகத்
தொடைபுனைவார்

காளையார் தமைக்கண்டு தொழப்பெறுவ தென்றென்று
தாளைநா ளும்பரவத் தருவார்பாற் சார்கின்ற
ராளைநீ ளிடைக்காண வஞ்சியநீர் நாயயலே
வாழைபாய் நுழைப்பழன முனைப்பாடி வளநாடர்
மன்னுதிருக் கானப்பேர் வளம்பதியில் வந்தெய்திச்
சென்னிவளர் மதியணிந்தார் செழுங்கோயில் வலங்கொண்டு
முன்னிறைஞ்சி யுள்ளணைந்து முதல்வர்சே வடிதாழ்ந்து
பன்னுசெழுந் தமிழ்மாலை பாடினர் பரவினர்

ஆராத காதலுடன் அப்பதியிற் பணிந்தேத்திச்
சீராருந் திருத்தொண்டர் சிலநாளங் கமர்ந்தருளிக்
காராரு மலர்ச்சோலைக் கானப்பேர் கடந்தணைந்தார்
போரானேற் றூர்கயிலைப் பொருப்பர்திருப் புனவாயில்

உமாபதி சிவாசாரியார் அருளிச் செய்த திருப்பதிகக் கோவை

குருகாவூர் திருவேள்விக் குடிவிசய மங்கை
குற்றாலங் குடமூக்குக் கோட்டாறு பனையூர்
கருகாவூர் குரங்காடு துறையோமாம் புலியூர்
கண்டியூர் வேதிகுடி கானூர்கோ கரணம்
திருவாரூ ரரனெறிபந் தணைநல்லூர் நல்லந்
திருக்கண்டீச் சரந்தேவூர் திருச்சிராப் பள்ளி
பெருவேளூர் கீழ்வேளூ ரெறும்பியூர் கானப்
பேர்திருமங் கலக்குடியாக் கூர்கோவ லூரே

ஆலவா யாப்பனூர் பரங்குன்றே டகத்தோ
டருங்கொடுங்குன் றந்திருப்புத் தூர்புனவா யிலினோ
டேலுமிரா மேச்சரமா டானை கானப்பே
ரெழிற்றிருப்பூ வணஞ்சுழிய லின்புறுகுற் றாலம்
பாலலோ சனன்றிருநெல் வேலியொடு
பாண்டிபதி னன்குமலை நாட்டிலஞ்சைக் களமொன்றே
சீலமிகு மவிநாசி திருமுருகன் பூண்டி
திருநணு கொடிமாடச் செங்குன்றூர் தானே.

திருவிளையாடற் புராணம்

அருச்சனைப் படலம்

சரதவேதம் பரவுபுன வாயினக்ருந் தவசித்தர்
இரதவாதஞ் செய்துசிவ னுருவங்கண்ட வெழினகரும்
வரதனுகி யரனுறையுங் கானப்பேரு மலைமகளை
விரதயோக நெறிநின்று மணர்தார் சுழியல் வியனகரும்

திருப்புகழ்

அனத்தோ டொப்பா மெனுநடை மடவியர் அநுராகம்
அதற்கே சிச்சீ இனமென துயிர்கெட அழகாமோ
உனைப்பா டிப்பே றுறுமொரு வரமினி உதவாயோ
உவப்பா கத்தே வர்கள்சிறை விடவிடும் அயிலோனே
முனைப்பா டிக்கே திரிதரும் அரிதிரு மருகோனே
முகிற்கே நத்தா விரிதரு கலபநன் மயிலோனே
தினைக்கா வற்கே உரியவள் மனமகிழ் மணவாளா
திருக்கா னப்பேர் நகர்தனி லினிதுறை பெருமாளே !

கோலக் காதிற் குழையாலே கோதிச் சேர்மைக் குழலாலே
ஞாலத் தாரைத் துயரேசெய் நாரிக் காசைப் படலாமோ
மேலைத் தேவர்க் கரியோனே வீரச் சேவற் கொடியோனே
காலப் பாசத் துயர்தீராய் கானப் பேரிற் பெருமாளே !

பாண்டிய நாட்டுச் சிவதலத் தொகை.

(பெருந்தொகை)

" கூடல் புனவாயில் குற்றால மாப்பனூர்
ஏடகநெல் வேலி யிராமேச — மாடானை
தென்பரங்குன் றஞ்சுழிய றென்றிருப்பத் தூர்கானை
வன்கொடுங்குன் றம்பூ வணம்."

இங்கே **கானை** என்பது கானப்பேர் என்கின்ற காளையார் கோயில்.

மீனாட்சியம்மை குறம்

(குமரகுருபர சுவாமிகள்)

" கூடல் புனவாயில் கொடுங்குன்று பரங்குன்று
குற்றாலம் ஆப்பனூர் பூவணம் நெல்வேலி
ஏடகம் ஆடானை **திருக் கானப்பேர்** சுழியல்
இராமேசம் திருப்புத்தூர் இவைமுதலாம் தலங்கள் "

(கானப்பேர் : காளையார்கோயில்)

திருச்சிற்றம்பலம்

சோமசுந்தரம் பிரஸ் - கோவை